இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்டி எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.
Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust
KDK SINCE 1909 JAPAN
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில்: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us:
# தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர் : 04, இதழ்: 61 சோபகிருது வருடம், ஆவணி மாதம் 28ஆம் திகதி வியாழக்கிழமை
(14.09.2023) ஹிஜ்ரி 1445, ஸபர் - 28, 0115 886187 - பக்கங்கள் 10
விலை ரூ.50

Special offer
1st to 30th September 2023
KDK SINCE 1909 JAPAN
DISCOUNT 15% (On selected models only)
*Conditions apply
Cash or Card
Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74

படம்: ஏசான் தசநாயக்க



# ரயில்வே ஸ்தம்பிதம்!

## கடமைக்குத் திரும்பாத சாரதிகள் வீட்டுக்கு

02பக்கம்

# தேரேறி வந்தான் நல்லைக் கந்தன்



நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா இலட்சக்கணக்கான பக்தர்கள் புடைசூழ நேற்று(13) நடைபெற்றது.

## தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை

### சிறிசேன வேண்டுகோள்



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன வேண்டுகோள் விடுத்துள்ளார். கொழும்பில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்துள்ள அவர் கடந்த நான்கு வருடங்களாக...

02 பக்கம்

## வெளிநாடு பறந்தார் ரணில்: பதில் அமைச்சர்கள் நியமனம்

கியூபா மற்றும் அமெரிக்காவுக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (13) அதிகாலை நாட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றதுடன், ஜனாதிபதி வெளிநாடு சென்றுள்ள காலப்பகுதியில் அவருக்கு கீழுள்ள அமைச்சுகளின் பொறுப்புகள் இராஜாங்க அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதன்படி, இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன், பதில் பாதுகாப்பு அமைச்சராகவும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பதில் நிதி அமைச்சராகவும் இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தொழில்நுட்ப மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு பதில் அமைச்சராகவும் இராஜாங்க அமைச்சர்...

02பக்கம்

## அபிவிருத்தி நடவடிக்கைகளை முறையாக அறிவிக்க வேண்டும்

### அரச அதிகாரிகளுக்கு ஜனாதிபதியின் செயலாளர் எழுத்துமூலம் அறிவிப்பு

நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளை திட்டமிடும்போது, அது தொடர்பில் மாவட்ட அபிவிருத்திக் குழு மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழு என்பவற்றுக்கு அறிவிக்குமாறு அரச அதிகாரிகளுக்கு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண...

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



இங்க உள்ள எதிர்க்கட்சிகளை உடைச்சது போதாதென்று இந்திய எதிர்க்கட்சிகளையும் உடைக்கப் பார்க்கிறார் போல ரணில் ஐயா..



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் நேற்று (13) நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இந்த இருநாட்டு தலைவர்களின் சந்திப்பு சர்வதேச அரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## போலி பொலிஸார் குறித்து எச்சரிக்கை

பொலிஸார் என தெரிவித்து திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுவோர் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பொலிஸ் சீருடை அணியாத நபர்களே இவ்வாறான குற்றங்களில் ஈடுபடுகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் என தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டு பொருட்கள், வாகனங்கள், வீடுகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை சோதனை...

02 பக்கம்

## இந்திய எதிர்க்கட்சி கூட்டணிக்கு தலைமை தாங்குவீர்களா?

### மம்தாவிடம் வினவினார் ரணில்



இந்தியாவின் எதிர்க்கட்சி கூட்டணிக்கு மம்தா பானர்ஜி தலைமை தாங்குவாரா என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள மம்தா பானர்ஜி மக்கள் ஆதரவளித்தால்...

02 பக்கம்

## அர்த்தபுஷ்டியாக செயற்படுங்கள்

### இலங்கை அரசுக்கு இந்தியா வலியுறுத்தல்



தமிழர்கள் உட்பட தனது அனைத்து குடிமக்களின் அடிப்படை சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் முழுமையாக பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்கான, தனது உறுதிமொழிகளை விரைவில் செயல்படுத்துவதற்கு "அர்த்தமுள்ள வகையில்" ...

02 பக்கம்

## இந்திய உயர்ஸ்தானிகர் பாக்லேவுக்கு இடமாற்றம்



தற்போது இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராக உள்ள ஸ்ரீ கோபால் பாக்லே,...

02 பக்கம்

## 05 சதவீதமானோருக்கு பிறப்புச் சான்றிதழ் இல்லையாம்!

02 பக்கம்

## கோட்டாவை அணைத்தபடி இறந்திருப்பார் சஹ்ரான்

### சுனில் ஹந்துன்நெத்தி பரபரப்பு கருத்து



உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டுத்தாக்குதலின் பின்னர் இந்த நாட்டின் ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்றுக் கொள்வார் என சஹ்ரானுக்கு தெரிந்திருந்தால் அவர் கோட்டாபய ராஜபக்ஷவையும் கட்டிப்பிடித்துக் கொண்டே உயிரிழந்திருப்பார் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்...

02 பக்கம்



உஷ்

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கிறிஸ்தவ மக்கள் சார்பில் வேட்பாளர் ஒருவரை களமிறக்க திட்டங்கள் தீட்டப்பட்டு வருவதாக தகவல்.

பேராயர் மெல்கம் ரஞ்சித் இதன் பின்னணியில் இருப்பதாக சொல்லப்படுகிறது. பிரபல சட்டத்தரணி சாலிய பீரிஸின் பெயர் பரிசீலிக்கப்படுகிறதாம்.

# கொக்குத்தொடுவாயில் மூன்று மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் விடுதலைப்புலிகளின் சயனைட் குப்பி, இரண்டு இலக்கத்தகடுகள் மீட்பு

விஜயரத்தினம் சரவணன்

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் ஏழாம்நாள் அகழ்வாய்வுகள் நேற்று (13) இடம்பெற்றநிலையில், மூன்று மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டதுடன் விடுதலைப் புலிகளின் சயனைட் குப்பி ஒன்றும் இரண்டு இலக்கத் தகடுகளும் தடையப் பொருட்களாக எடுக்கப்பட்டன.

இந்நிலையில் ஏழுநாட்கள் அகழ்வாய்வுப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் இதுவரை 09மனித எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை குறித்த அகழ்வாய்வுப் பணிகளுக்கென, 5.7மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அந்த நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி கடந்தவாரம் அகழ்வுப்பணிகள் மேற்கொள்ள முடிந்ததுடன், இந்தவாரமும் அகழ்வுப் பணியை மேற்கொள்ளவுள்ளதாகவும் தொடர்ந்து அடுத்தவாரமும் அகழ்வாய்வுகளை மேற்கொள்ள நீதிமன்றம் உத்தரவிட்டால் அகழ்வாய்வுகளை மேற்கொள்ள நிதி போதுமானதாக உள்ளதாகவும் முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி தகவல் தெரிவித்துள்ளார்

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,



முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள்



கடந்தவாரம் செப்டெம்பர் (06) புதன்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் ஏழாம்நாள் அகழ்வாய்வுகள் நேற்று (13) முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இடம்பெற்றன.

அதேவேளை குறித்த அகழ்வாய்வுகளில் தொல்லியல் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம், முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி கே.வாசுதேவா, சட்டத்தரணி கே.எஸ்.நிரஞ்சன், ரனித்தா ஞானராசா, தடயவியல் பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஆகியோரின் பங்கேற்புடன், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த ஏழாம்நாள் அகழ்வாய்வுகள் தொடர்பில் முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா கருத்துத் தெரிவிக்கையில்,

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் ஏழாம்நாள் அகழ்வாய்வில், மூன்று மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டதுடன் சைனட் குப்பி ஒன்றும் இரண்டு இலக்கத் தகடுகளும் தடயப் பொருட்களாக எடுக்கப்பட்டன.

இந்த புதைகுழியிலுள்ள எலும்புக்கூடுகள் மிக நெருக்கமாக, ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்து காணப்படுவதால், அகழ்வாய்வு செய்வதற்கு அதிக நேரத்தைச் செலவிடவேண்டியுள்ளது.

அகழ்வாய்வுகள் மேற்கொள்ளும்போது, சில நாட்களில் ஓரிரு எலும்புக்கூட்டுத் தொகுதிகளையே அகழ்ந்தெடுக்கமுடிகின்றது.

குறித்த மனிதப்புதைகுழியிலுள்ள அனைத்து எலும்புக்கூடுகளையும் தடயப்பொருட்களையும் எடுத்தாலே, இது தொடர்பில் சரியான ஆய்வுகளை மேற்கொள்ளமுடியும். எனவே குறித்த அகழ்வாய்வுப் பணிகளின் காலத்தை வரையறுக்க முடியாதுள்ளது.

ஏற்கனவே அகழப்பட்டுள்ள குழியிலிருந்து மனித எச்சங்களையும் தடயப்பொருட்களையும் முழுமையாக அகழ்வாய்வு செய்து எடுப்பதற்கு ஒரு சில வாரங்கள் நீடிக்கலாம் என நினைக்கின்றேன்.

அதனைவிட இன்னும் மேலதிகமாக குழியைத் தோண்டி அகழ்வாய்வுகள் மேற்கொள்வதற்கு எவ்வளவு காலம்எடுக்கும் எனக்கூறமுடியாது. இந்தப் புதைகுழி தொடர்பான அறிக்கைகள், அகழ்வாய்வு



செய்யும் குழுவினால், முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்படும்.

அகழ்வாய்வில் எடுக்கப்பட்ட மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளும் தடயப்பொருட்களும் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ள பிரேத அறையின் விசேட அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த அகழ்வாய்வுக்கென 5.7மில்லியன் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றது. இவ்வாறு கிடைக்கப்பெற்ற நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி, புதைகுழிக்குரிய தகரப் பந்தல், தங்குமிட வசதி, மலசலகூட வசதி உள்ளிட்ட விடயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு இருக்கின்ற நிதி மூலத்தை வைத்து கடந்த வாரத்தில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இந்தவாரத்திலும் அகழ்வாய்வுகளை மேற்கொண்டுவருகின்றோம். அடுத்தவாரமும் அகழ்வாய்வுகளை மேற்கொள்வதற்கு ஒதுக்கப்பட்ட நிதி போதுமாகவுள்ளது.

தொடர்ந்து அகழ்வாய்வுகளை மேற்கொள்வதற்கு நீதவான் உத்தரவிடுவாரெனில் அகழ்வாய்வுகளைத் தொடர்ந்து மேற்கொள்வோம். எடுக்கப்பட்ட தகட்டிலக்கம் தொடர்பாக, அவை எந்தக் காலத்துக்குரியவை போன்ற விடயங்களை ஆராய்ந்து வருகின்றோம். அதன்பின்னர் தகட்டிலக்கங்கள் தொடர்பன விபரங்கள் அறியத்தரப்படும் என்றார்.

இந்த அகழ்வாய்வு இடம்பெறும் இடத்துக்கு முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் எதிர்வரும் தினங்களில் வர்த்தமானியில் வெளியிடப்படும்

## வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில், சர்வதேச அளவுகோல்களின்படி தயாரிக்கப்பட்ட புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் எதிர்வரும் சில தினங்களில் வர்த்தமானியில் வெளியிடப்படும் என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

இந்நாட்டு மக்களின் மனித உரிமைகளை பாதுகாக்கும் வகையில் சமநிலையான சட்டமொன்றைக் கொண்டுவரும் நோக்கில் தற்போதுள்ள பயங்கரவாத தடைச் சட்டம் திருத்தப்பட்டதாகவும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (13) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி,

"சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகோல்களின்படியும் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையிலும் நாட்டு மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலும் சமநிலையான சட்டத்தைக் கொண்டுவரும் நோக்கத்துடன் தற்போதுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இது தொடர்பில் நீதியமைச்சரின் தலைமையில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு, இந்த புதிய சட்டம் சாதகமான மட்டத்தில் திருத்தப்பட்டுள்ளது. நமது நாட்டில் சட்டங்களைத் திருத்தவும் புதிய சட்டங்களை உருவாக்கவும் ஒரு பொறிமுறை உள்ளது. எனவே அந்த முறைகளுக்கு ஏற்ப இந்த புதிய சட்டம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பிறகு, இந்த சட்டம் குறித்த புரிதலை நாட்டு மக்கள் அனைவரும் பெற முடியும்.

இதன்படி, பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டு, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற இந்த புதிய சட்டத்தை இந்த வாரத்திலோ அல்லது அடுத்த வாரத்திலோ விரைவாக வர்த்தமானியில் வெளியிட எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின்னர் முதலாம் வாசிப்புக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதன்படி, இந்நாட்டு மக்களுக்கு இந்த சட்டம் தொடர்பில் கருத்துவேறுபாடுகள் இருப்பின், ஒரு வாரத்துக்குள் அதை சவாலுக்குட்படுத்தி உயர் நீதிமன்றத்துக்கு செல்லும் வாய்ப்பும் உள்ளது.

உயர் நீதிமன்றத்துக்கு தனியான, விசாரணை நீதிமன்ற அதிகாரம் உள்ளது. அதன் பிரகாரம் உயர் நீதிமன்றம் வழங்கக்கூடிய அறிவுறுத்தல்களின்படி, மேலும் திருத்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் தயாராகவுள்ளது. இந்த புதிய சட்டம் ஏற்கனவே உள்ள சட்டத்துடன் ஒப்பிடும்போது மிகவும் முற்போக்கான புதிய விடயங்களுடனேயே திருத்தப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முதன்முதலில் 1979ஆம் ஆண்டு ஆறு மாத காலத்துக்காக கொண்டு வரப்பட்டது. ஆனால் தொடர்ந்தும் இந்நாட்டில் பயங்கரவாதச் செயற்பாடுகள் தீவிரமாக இடம்பெற்றதன் காரணமாக, இன்றுவரை பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்பது தொடர்ந்தும் அமுலில் உள்ள ஒரு சட்டமாக இருக்கின்றது. ஆனாலும் 2009 இல் யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னர் இந்த சட்டம் தேவையா? என பல்வேறு விமர்சனங்கள் இது தொடர்பில் முன்வைக்கப்பட்டு வந்ததன் காரணமாக, 2017 மற்றும் 2018 இல், இந்த சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் துரதிர்ஷ்டவசமாக 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் காரணமாக அந்த முயற்சிகள் தடைப்பட்டதுடன், மீண்டும் இந்த பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை வலுவாக அமுல்படுத்த வேண்டும் என்று கருத்துகள் மேலோங்கின. பின்னர், கடந்த காலங்களில் இந்த விடயம் தொடர்பில் மீண்டும் கலந்துரையாடல்கள் இடம்பெற்ற பின்னர், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தளர்த்துவதற்கான வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2021 செப்டெம்பர் மாதத்தில், பொலிஸ் மா அதிபர், பயங்கரவாத செயல்களில் நேரடியாக ஈடுபட்டவர்களைத் தவிர வேறு யாரையும் இந்த சட்டத்தின் கீழ் கைது செய்யக் கூடாது என்று பொலிஸ் நிலையங்களுக்கு ஒரு சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தினார்.



இதன்படி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களின் எண்ணிக்கை வீதாசார அடிப்படையில் குறைந்துள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், தடுப்புக் காவலில் வைத்திருக்கும் காலத்துக்கு எந்த எல்லையும் இருக்கவும் இல்லை.

ஆனால், இந்த புதிய சட்டத்தின் மூலம் 60 நாட்கள் மாத்திரமே தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க முடியும். மேலும், அவர்களை சட்ட பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட மையங்களில் மாத்திரமே தடுத்து வைக்கவும் முடியும். இந்தப் புதிய சட்டத்துக்கு ஏற்ப ஒருவரைக் கைது செய்த பிறகு, 48 மணி நேரத்துக்குள் நீதிபதியின் முன்னிலையில் ஆஜர்படுத்தி இது தொடர்பில் விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும், ஒப்புதல் வாக்குமூலத்தின் (confession) அடிப்படையில் யாருக்கும் வழக்குத் தொடர முடியாது. அவ்வாறு வழக்குத் தொடர வேண்டுமெனில், அது பொதுவான சட்டத்தின்படி நீதிபதியின் முன் செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் படியே அமைய வேண்டும். புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு தயாரிக்கப்பட்டதன் பின்னர், சட்டத்தரணிகள், சட்டத்தரணிகள் சங்கம், சர்வதேச சமூகம், சிவில் அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள் என பல்வேறுபட்டவர்கள் முன்வைத்த கருத்துகள் குறித்தும் நாம் அவதானம் செலுத்தினோம்.

அதன்படி, புதிய பரிந்துரைகளுடன் திருத்தப்பட்ட சட்டம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்கு அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்துள்ளது" என்றும் தெரிவித்தார்.

### ரயில்வே...

ரயில்வே பணியாளர்களின் வேலைநிறுத்தத்தினால் நேற்றும் ரயில் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டது.

இந்த வேலைநிறுத்தத்தினால் அத்தியாவசிய சேவைகளும் பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளதால் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள 84 புகையிரத சாரதிகள் உடனடியாக பணிக்கு சமுகமளிக்குமாறு ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

அவ்வாறு அவர்கள் கடமைகளுக்குச் செல்லத் தவறினால், அவர்கள் தங்கள் பதவிகளைத் தாமாகவே இராஜினாமாச் செய்ததாக கருதப்படுவார்கள் என்பதுடன், மேலும் அதற்கான கடிதங்கள் அனுப்பப்படும் என்றும் ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை புகையிரத சாரதிகளின் பணிப்பகிஷ்கரிப்பு தொடரும் எனவும் பணிப்புறக்கணிப்பு அல்லது கோரிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு எந்தவொரு தரப்பினருக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை எனவும் புகையிரத சாரதிகள் சங்கச் செயலாளர் எஸ். ஆர். சி. எம். சேனநாயக்க நேற்றிரவு தமிழன் செய்திகளிடம் தெரிவித்தார்.

போக்குவரத்து அமைச்சர் அல்லது வேறு யாரேனும் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டிருந்தால், அழைப்பை தமக்கு வழங்குமாறு செயலாளரிடம் கோரிக்கை விடுப்பதாகவும் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஆட்சியாளர்களுக்கு விருப்பம் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

450 சாரதிகள் இருக்க வேண்டிய திணைக்களத்தில் 280 சாரதிகள் மாத்திரமே உள்ளனர். வேலைநிறுத்தம் இன்றி சாதாரண நாளிலும் பல ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்படுவதால், நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளான இளைஞன் போன்று தினசரி பயணிகள் பாதுகாப்பற்ற முறையில் ரயிலில் பயணிக்க நேரிடுவதாகவும் சேனநாயக்க மேலும் குறிப்பிட்டார்.

விபத்தில் உயிரிழந்த கம்பஹா குழந்தையின் பெறுமதி 5 இலட்சம் ரூபா என அமைச்சு தீர்மானித்துள்ளதாகவும் நாட்டு மக்களின் உயிரை பணப் பெறுமதியில் ஆட்சியாளர்கள் தீர்மானிப்பது மிகவும் பாரதூரமான நிலைமை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

#### இழப்பீடு

இதேவேளை ஹொரபே புகையிரத நிலையத்துக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த கம்பஹா மொரகொட பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர் தினித் இந்துவர பெரேராவின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஐந்து இலட்சம் ரூபாவை வழங்க ரயில்வே திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

இவ்வாறான விபத்து தொடர்பான இழப்பீடு வழங்குவதற்கான சட்டப் பின்னணி இல்லாத போதிலும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தனவின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.இதன்படி, அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கு உட்பட்டு, இத்தொகை உயிரிழந்த இளைஞனின் குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது.

### 05 சதவீதமானோருக்கு...

நாட்டின் மொத்த சனத்தொகையில் 5 சதவீதமானோர் பிறப்புச் சான்றிதழ் இன்றி வசித்து வருவதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்களுக்கான பிறப்புச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக எதிர்வரும் காலங்களில் விசேட வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தவுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. தற்போது வரை, பிறப்புச் சான்றிதழ் இல்லாதிருந்த சுமார் 14 ஆயிரம் பேருக்கு நடமாடும் சேவை ஊடாக பிறப்புச் சான்றிதழ்களை வழங்கியுள்ளதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

### கோட்டாவை...

சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

கினிகத்தேன பகுதியில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து எவருக்கும் கரிசனை கிடையாது.

நாமல் ராஜபக்ஷவாக இருக்கட்டும் அல்லது சஜித் பிரேமதாசவாக இருக்கட்டும் இவர்களுக்கு நாட்டு மக்களின் பிரச்சினைகள் குறித்து கரிசனை இல்லை.முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொலைக்காட்சியில் தோன்றி நகைச்சுவையூட்டுகின்றார். கட்சிப் பிரச்சினைகள் பற்றி மட்டுமே அவர் பேசுகிறார்.

பொருளாதார, உணவுப் பிரச்சினை, மருந்துப் பிரச்சினை பற்றி அவர் எதுவும் பேசுவதில்லை. தற்பொழுது நாட்டில் சனல் 4 ஊடகத்தின் காணொளியை வெளிப்படுத்தியுள்ள நிலையில் ஏனைய அனைத்து பிரச்சினைகளும் மூடப்பட்டுள்ளன.

பொருட்களின் விலை அதிகரிப்பு, எரிபொருள் விலை அதிகரிப்பு, பேருந்துக் கட்டண உயர்வு மற்றும் மக்களின் ஏனைய பிரச்சினைகள் குறித்து பேசப்படுவதில்லை.ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு இன மத கலவரங்களை உருவாக்கும் மிக இழிவான அரசியல் கலாசாரம் நிலவுகிறது. எனவே நாட்டின் அரசியல் முறைமையை மாற்றி அமைக்க வேண்டும்.உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டு தாக்குதலின் பின்னர் இந்த நாட்டின் ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்றுக் கொள்வார் என சஹ்ரானுக்கு தெரிந்திருந்தால் அவர் கோட்டாபய ராஜபக்ஷவையும் கட்டிப்பிடித்துக் கொண்டே உயிரிழந்திருப்பார்.அவர்கள் நன்றாக யாரோ ஒருவரால் இயக்கப்பட்டுள்ளனர் என்பது மட்டும் இப்போது தெளிவாகத் தெரிகிறது.அவர்களை தங்களுக்கு ஏற்றபடி யாரோ பயன்படுத்தியுள்ளனர். என்றார்.

### அபிவிருத்தி...

பிரதம செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு கடிதம் மூலம் ஜனாதிபதியின் செயலாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரச மற்றும் அரை-அரச நிறுவனங்களால், மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்து, செயல்படுத்தும்போது அது குறித்து, மாவட்ட அபிவிருத்திக் குழு மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுக்களுக்கு அறிவிக்காமையினால் அரச அதிகாரிகளுக்கும் அரசியல் பிரதிநிதிகளுக்கும் இடையில் இடைவெளி ஏற்பட்டுள்ளது.

மேலும், மாவட்ட அபிவிருத்திக் குழு மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுக்களின் தலைவர்கள் இது தொடர்பில் ஜனாதிபதிக்கு தொடர்ச்சியாக முறைப்பாடுகளை சமர்ப்பித்து வருவதுடன் அரச அதிகாரிகளுக்கும் அரசியல் பிரதிநிதிகளுக்குமிடையிலான தொடர்பு இன்மையால் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளால் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஏற்பட்டுள்ள தடைகள் தொடர்பிலும் ஜனாதிபதியின் செயலாளர் கவனம் செலுத்தியுள்ளார்.

இதன்படி, இந்த நடவடிக்கைகளின்போது, அரச அதிகாரிகளுக்கும் அரசியல் பிரதிநிதிகளுக்கும் இடையில் முறையான ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் நோக்கில் ஜனாதிபதியின் செயலாளர் இந்த பணிப்புரைகளை வழங்கியுள்ளார்.

இனிமேல், அரச மற்றும் அரை அரச நிறுவனங்கள் மூலம் மாவட்ட மட்டத்திலோ அல்லது பிரதேச மட்டத்திலோ அபிவிருத்தி நடவடிக்கைகளை திட்டமிடும்போதும் செயல்படுத்தும்போதும் மாவட்ட அபிவிருத்திக் குழு மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுக்களுக்கு அது குறித்து அறிவித்து, அவர்களின் ஒத்துழைப்புடனும் ஒருங்கிணைப்புடனும் செயல்படுமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தனது கடிதத்தில் அரச அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

### இந்திய எதிர்க்கட்சி..

நாளையே நாங்கள் அதிகாரத்திலிருக்க முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

டுபாய் விமான நிலையத்தில் மம்தா பானர்ஜி இலங்கை ஜனாதிபதியை சந்தித்துள்ளார்.நவம்பரில் மேற்கு வங்காளத்தில் இடம்பெறும் மாநிலவர்த்தக உச்சிமாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அவர் இலங்கை ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்னை டுபாய் விமான நிலையத்தில் சந்தித்தார்.என்னை சிறிய உரையாடலுக்கு அழைத்தார் என மம்தா பானர்ஜி டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

நான் அவரை பெங்கால் உலக வர்த்தக உச்சிமாநாட்டுக்கு அழைத்தேன் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்தார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### தாக்குதல்...

பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் தமக்கு எதிராக பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டதாக தெரிவித்துள்ள அவர்,இந்த தாக்குதலுக்கு யார் காரணம் என்பது குறித்து சனல் 4 ஆவணப்படம் வேறு தகவல்களை வெளியிட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் தெரிவித்துள்ளது போல நாங்களும் எங்கள் குரல்களை எழுப்பி சர்வதேச விசாரணைக்கு அழைப்பு விடுக்கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### வெளிநாடு...

அனுப பெஸ்குவல் பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் பதில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

"G77 குழு + சீனா" அரச தலைவர்களின் உச்சி மாநாட்டில் உரையாற்றுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கியூபாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். அதன் பின்னர் அவர், ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக அமெரிக்காவுக்கு பயணமாகவுள்ளார்.

### இந்திய உயர்ஸ்தானிகர்...

அவுஸ்திரேலியாவுக்கான அடுத்த இந்திய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்பிரீத் வோஹ்ராவுக்குப் பிறகு அவுஸ்திரேலியாவுக்கான இந்திய உயர்ஸ்தானிகராக பாக்லே பதவியேற்பார்.அவர் விரைவில் பணியை ஏற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாக்லே வெளியுறவு அமைச்சகத்தில் அதன் அதிகாரபூர்வ செய்தித் தொடர்பாளர், இணைச் செயலர் (பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான்) மற்றும் சமீபத்தில் பிரதமர் அலுவலகத்தில் இணைச் செயலாளராக பல்வேறு பதவிகளில் பணியாற்றியுள்ளார்.

பாக்லே மே 2020 இல் கொழும்பில் பணியை ஏற்றுக்கொண்டார்.

ஜனவரி 4, 1966 இல் பிறந்த பாக்லே, லக்னோ பல்கலைக்கழகத்தில் வேதியியலில் முதுகலைப் பட்டம் பெற்றவர் மற்றும் இந்தி, உருது, சமஸ்கிருதம், ஆங்கிலம், உக்ரைனியன், ரஷ்யன் மற்றும் நேபாளி ஆகிய மொழிகளைப் பேசுகிறார்.

### போலி பொலிஸார்...

செய்வது போன்று நடித்து திருட்டுச் சம்பவங் களில் ஈடுபடும் நபர்கள் தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் சோதனை அல்லது தேடுதல் நடவடிக்கையின் போது சீருடையில் காணப்படுவார்கள் என தெரிவித்துள்ள பொலிஸார் தங்கள் அடையாளத்தை வெளிப்படுத்தாதவர்கள் தங்கள் உடமைகளை வீடுகளை சோதனையிடுவதற்கு பொதுமக்கள் அனுமதிக்கக் கூடாது எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### அர்த்தபுஷ்டியாக...

செயல்படுமாறு இலங்கை அரசாங்கத்தை இந்தியா வலியுறுத்தியுள்ளது.

"இலங்கையின் நெருங்கிய அண்டை நாடாகவும் நண்பராகவும் 2009ஆம் ஆண்டு முதல் இலங்கையின் நிவாரணம், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் புனரமைப்புச் செயன்முறைகளுக்கான இலங்கையின் முயற்சிகளுக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளித்து வருகின்றது" என ஜெனிவாவில் உள்ள ஐ. நா. சபை மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புகளுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி இந்திராமணி பாண்டே தெரிவித்துள்ளார்.

சமத்துவம், நீதி, கண்ணியம் மற்றும் அமைதிக்கான தமிழர்களின் அபிலாஷைகளை ஆதரிக்கும் இரண்டு அடிப்படைக் கொள்கைகளை இந்தியா ஆதரித்து வருகிறது.

அத்துடன் இலங்கையின் ஐக்கியம், பிராந்திய ஒருமைப்பாடு , இறையாண்மை, நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளையும் இந்தியா ஊக்குவிப்பதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் அறிக்கையின் ஊடாடும் உரையாடலின் போது பாண்டே கூறியுள்ளார்.

சமத்துவம், நீதி மற்றும் அமைதிக்கான தமிழர்களின் அபிலாஷைகளையும் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் மாகாண சபைத் தேர்தலை நடத்தி இலங்கையில் தமிழர்களுக்கு மரியாதை மற்றும் கண்ணியமான வாழ்வை உறுதி செய்வதற்கும் இலங்கை அரசாங்கம் உறுதியளிக்கும் என்று இந்தியா நம்புவதாக பாண்டே குறிப்பிட்டுள்ளார்.

13ஆவது திருத்தம், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் கொண்டு வரப்பட்டது. இது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தற்காலிக இணைப்புடன் 9 மாகாணங்களை பகிர்ந்தளிக்கப்பட்ட அலகுகளாக உருவாக்கியது.

இந்தநிலையில் தேர்தல் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தும் நடவடிக்கையைத் தொடர்ந்து ஒன்பது மாகாணங்களுக்கான தேர்தல்கள் 2018 முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

தற்போதுள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் தேர்தலை நடத்துவதற்கு பாராளுமன்றத் திருத்தம் தேவைப்படுகிறது என்று பாண்டே தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் தனது உறுதிமொழிகளை செயல்படுத்துவது குறித்து இலங்கை அரசாங்கத்தின் மறுஉறுதிப்படுத்தலை கவனத்தில் கொண்டுள்ளது.

இருப்பினும், அதற்கான முன்னேற்றம் போதுமானதாக இல்லை. கடந்த வருடத்தில் இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் அதன் பொருளாதார சவால்களை சமாளிக்க இந்தியா நான்கு பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் பலமுனை ஆதரவை வழங்கியுள்ளதாக பாண்டே தெரிவித்துள்ளார்.

# சைபர் தாக்குதல் தொடர்பில் விரிவான விசாரணை ஆரம்பம்

## தொழில்நுட்ப அமைச்சு

அரச மின்னஞ்சல் முகவரிகளை இலக்கு வைத்து அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சைபர் தாக்குதல் தொடர்பில் விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தொழில்நுட்ப அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்திடம் அறிக்கை கோரப்பட்டுள்ளதாக தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 26ஆம் திகதி சைபர் தாக்குதல் காரணமாக பல அரச நிறுவனங்களின் மின்னஞ்சல் பரிமாற்ற தரவுகள் காணாமல்போயுள்ளதாக இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் தெரிவித்திருந்தது.

gov.lk டொமைனுக்குச் சொந்தமான தரவு அமைப்பை புதுப்பிக்கத் தவறியதன் காரணமாக தாக்குதலைத் தடுக்க முடியவில்லை என அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி மகேஷ் பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை, சைபர் தாக்குதலை நடத்திய குழுவின் தகவல்கள் குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

# கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்தும் இலக்கியக்களம்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நாளை 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இலக்கியக்கள நிகழ்வில் "காதலை வெளிப்படுத்துவதில் அதிக இரசனைமிக்க தலைமுறை அன்றைய தலைமுறையே / இன்றைய தலைமுறையே" என்னும் தலைப்பில் விவாத அரங்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு நடுவராக பிரதாஸ் சுப்பிரமணியமும் வாதிகளாக : சிவரட்ணம் தனுஜன், சந்திரசேகரன் சச்சின், இளையதம்பி மதுஜன், பிரதிவாதிகளாக : சிவஞானசுந்தரம் திவிதர்ஷன், மனோகரன் சதுர்ஷனன், அனுப் அபினோஷன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# தகுதியான தொண்டர் ஆசிரியர்கள் அனைவருக்கும் நிரந்தர நியமனம்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி



வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான கல்வி அமைச்சுகளினால் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு தகுதியானவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் நேற்று (13) அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து பொன்னாடை போர்த்தி நன்றியை தெரிவித்த நிலையிலேயே, அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நீண்ட காலமாக தொண்டர் ஆசிரியர்களாக சேவையாற்றுகின்றவர்களுக்கு, நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன், அதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 1000 தாதியர்களை சேவையில் இணைக்கும் சுகாதார அமைச்சு

தாதியர் கற்கைநெறியை பூர்த்தி செய்த 1000 தாதியர்களை சேவையில் இணைத்துக்கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த ஆட்சேர்ப்பு விரைவில் மேற்கொள்ளப்படும் என சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டார்.

தாதியர் கற்கைநெறியை நிறைவு செய்த இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இதேவேளை, இணை சுகாதார பட்டதாரிகள் குழுவை சுகாதார அமைச்சின் பதவிகளில் உடனடியாக இணைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

தாதியர் பயிற்சிக்காக 3500 மாணவர்களை உள்வாங்குவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்காக 2019, 2020ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் சித்தியடைந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை நாளை(15) முதல் ஒக்டோபர் 18ஆம் திகதிவரை அனுப்பி வைக்க முடியும்.

# ஹரினுக்கு எதிரான விசாரணையை நிறுத்த பொலிஸாருக்கு அறிவித்தல்



ஈஸ்டர் ஞாயிறு தின தாக்குதல் சம்பவம் தொடர்பில் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவுக்கு எதிரான விசாரணைகளை முடிவுக்கு கொண்டு வருமாறு பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் உயர் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் இந்த அறிவித்தலை விடுத்தார்.

புவனேக்க அலுவிஹாரே, ஜனக் டி சில்வா மற்றும் பிரீத்தி பத்மன் சூரசேன ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனு பரிசீலிக்கப்படவுள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு தின தாக்குதல் தொடர்பில் தம்மை கைது செய்வதை தடுக்க இடைக்கால உத்தரவு பிறப்பிக்குமாறு மனுதாரர் தனது மனுவில் கோரியுள்ளார்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆவணி மாதம் 28ஆம் நாள் வியாழக்கிழமை**

**மேஷம்:** நீண்ட நாள் பகைவர்கள் மன்னிப்புக்கோரி கரம் சேர்த்துக் கொள்வார்கள். மனதை கட்டுப் பாட்டுக்குள் வைத்துக் கொள்க.

**ரிஷபம்:** ஏதாவது வீண் வம்பு வழக்குகளில் மாட்டிக்கொள்ளாமல் பார்த்துக் கொள்ளுங்கள்ா பயணத் தடை உண்டு.

**மிதுனம்:** இன்ப அனுபவங்களால் திளைத்திருப்பீர்கள். யாரையும் நம்புவதற்கு முன்னர் ஒன்றுக்கு நான்கு முறை சிந்திக்கவும்.

**கடகம்:** தேவையான பணம் கையிருப்பில் இருந்தாலும் செலவுகளுக்கு குறையிருக்காது. வீண் கேலிப் பேச்சுகளை தவிருங்கள்.

**சிம்மம்:** பிரச்சினை இன்றியே மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்வீர்கள். அவசியச் செலவுகளை நிச்சயம் செய்ய வேண்டிய நாள்.

**கன்னி:** ஏதோ ஒரு மனக்குறையோடு உலாவிக் கொண்டிருப்பீர்கள். உங்கள் பொருட்களைப் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள்.

**துலாம்:** நண்பர்கள் மூலம் நீங்கள் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். செலவுகளையும் பயணங்களையும் குறைத்துக் கொள்ளுங்கள்.

**விருச்சிகம்:** வெளியிடத்தவர்களின் பூரண அன்பும் அரவணைப்பும் நிறைந்த நாள். மனைவி மக்களோடு குதூகலித்திருப்பீர்கள்.

**தனுசு:** பெரியோர்களின் கோபத்துக்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். தொழில் வியாபாரத்தில் அக்கறை காட்டுங்கள்.

**மகரம்:** வீண்பழிகள் உங்கள் மீது சுமத்தப்படலாம். சற்று கஷ்டப்பட்டு உழைத்தாலன்றி பணம் கிடைப்பது அரிது.

**கும்பம்:** பெண்களால் எதிர்பாராத சில செலவுகள், சிக்கல்கள் ஏற்படலாம். எதற்கும் முந்திக்கொண்டு வாய் வார்த்தைகளை விடாதீர்கள்.

**மீனம்:** பண ரீதியில் இருந்து வந்த சிக்கல்களை இன்று சமாளிப்பீர்கள். காதல் விவகாரங்களை சற்று கவனமாக கையாளுங்கள்.

**திதி:** அமாவாசை முழுவதும்
**நட்சத்திரம்:** பூரம் பி.இ.4.54 வரை பின் உத்திரம்
**யோகம்:** மரணயோகம் பி.இ.4.54 வரை பின் அமிர்த சித்தம்
**வார சூலை:** தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்:** மு.ப.11.02 - 12.02 மணிவரை
**ராகு காலம்:** 1.32 - 3.02 மணிவரை
**எமகண்டம் :** 6.02 - 7.32 மணிவரை
**குளிகை :** 9.02 - 10.32 மணிவரை
**சந்திராஷ்டமம்:** மகர ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தன அதிர்ஷ்டம்:** அஸ்வினி,மகம், மூலம் (பிறந்தவர்களுக்கு)
**விசேட தினம் :** அமாவாசை விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739























வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவ தேர்த்திருவிழா நேற்று புதன்கிழமை காலை மிக சிறப்பாக இடம்பெற்றது. காலை 6 மணியளவில் விசேட பூஜை வழிபாடுகள் ஆரம்பமாகி, தொடர்ந்து ஆறுமுகப் பெருமான், வள்ளி - தெய்வானை சமேதரராய் காலை 07.15 மணிக்கு தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார். தேரில் வெளிவீதி உலா வந்த ஆறுமுக பெருமான் காலை 8.45 மணிக்கு தேர் இருப்பிடத்தை வந்தடைந்தார். தேர்த்திருவிழாவின் போது நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டனர். அதேவேளை, ஆயிரக்கணக்கான அடியவர்கள் அங்கப்பிரதட்சணம் செய்தும் நூறுக்கணக்கானவர்கள் காவடிகள் எடுத்தும் கற்பூரச் சட்டிகள் ஏந்தியும் முருகப்பெருமானை வழிபட்டனர். இன்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது. நல்லூர் மகோற்சவம் கடந்த 21ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து மகோற்சவ திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியிறக்கம் நடைபெறவுள்ளது. அத்துடன் மகோற்சவ திருவிழாக்கள் நிறைவுபெறும்.

படங்கள்: யாழ் நிருபர்

# தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023 செப்டெம்பர் 14ஆம் திகதி, வியாழக்கிழமை


## உலகை ஏமாற்றும் இலங்கை!

இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறலையும் நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்துவதற்கு அவசியமான அர்த்தமுள்ள நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. இங்கு ஐ.நா. மனித உரிமைகள் பதில் உயர்ஸ்தானிகர் நாடா அல்-நஷீஃப்பின் உரையைத் தொடர்ந்து ஏனைய நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் உரையாற்றினர்.

அதன்படி ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் சார்பில் பேரவையில் உரையாற்றிய பிரதிநிதி, அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபடுவதற்கும், ஒன்றுகூடுவதற்குமான பொதுமக்களின் உரிமைக்கு இலங்கை அரசாங்கம் மதிப்பளிக்கவேண்டும் என வலியுறுத்தினார்.

அதேபோன்று, வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் நீண்டகாலமாக உண்மை மற்றும் நீதிக்காகக் காத்திருப்பதாக சுட்டிக்காட்டிய அவர், மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாக்கும் அதேவேளை, பொறுப்புக்கூறலையும் நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்துவதற்கு அவசியமான அர்த்தமுள்ள நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்றார்.

அதேவேளை, அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, வட மெசிடோனியா, மாலாவி மற்றும் மொன்ரனேக்ரோ ஆகிய இணையனுசரணை நாடுகளின் சார்பில் உரையாற்றிய பிரிட்டன் பிரதிநிதி, இலங்கையில் அதிகாரப்பகிர்வு மற்றும் காணி விடுவிப்பு என்பன இன்னமும் கரிசனைக்குரிய பிரச்சினைகளாகக் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு கடந்தகால மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் என்பன இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை என்று தெரிவித்த அவர், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்று நிறுவப்படும் பட்சத்தில், பாதிக்கப்பட்டோர் உள்ளடங்கலாக சகல தரப்பினரதும் நம்பிக்கையை வென்றெடுப்பதனூடாக மாத்திரமே அது வெற்றிகரமானதொரு பொறிமுறையாக இயங்கமுடியும் எனக் குறிப்பிட்டார்.

அர்த்தபூர்வமான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதை முன்னிறுத்தி, சகல தரப்பினருடனும் கலந்துரையாடி மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டுமென ஜப்பான் பிரதிநிதி வலியுறுத்தினார்.

அதுமாத்திரமன்றி, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உள்ளடங்கலாக நிலைமாறுகால நீதியை உறுதிப்படுத்துவதற்குத் தாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் உறுதியளித்தார். மேலும் நியூஸிலாந்து, ஓமான், எகிப்து, லக்ஸம்பேர்க், ஜேர்மனி, பிரான்ஸ், இஸ்ரேல், துருக்கி, கியூபா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் இலங்கை தொடர்பில் பேரவையில் உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

உலக நாடுகள் கடந்த வருடங்களாகவே இலங்கைக்கு பொறுப்புக்கூறலையும் நல்லிணக்கத்தையும் வலியுறுத்தி வருகின்றன. ஆனால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பொறுப்புக்கூறல் தொடர்பான திட்டத்தை இலங்கை அரசாங்கம் முற்றாக நிராகரிப்பதாக ஜெனீவாவிலுள்ள ஐ.நாவிற்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹிமாலி சுபாசினி அருணதிலக்க பேரவையின் ஆரம்ப அமர்வில் தெரிவித்துள்ளார்.

இது மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் பேரவைக்கு வழங்கிய ஆணைக்கு அப்பால் செல்கின்றது என்பதை இலங்கைக்கு மீண்டும் வலியுறுத்த விரும்புவதாகவும்,இந்தத் தீர்மானங்கள் உள்விவகாரங்களில் தலையிடுபவை என்பதுடன் சமூகங்களை துருவமயப்படுத்துபவை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் இந்த நிராகரிப்பு புதிதல்ல.ஆரம்பகாலத்தில் இருந்தே சர்வதேச சமூகத்தின் கோரிக்கைகளை ,ஆலோசனைகளை இலங்கை தட்டிக்கழித்தே வந்திருக்கிறது. பொறுப்புக்கூறல் விடயத்தில் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துக்கும் பின்னரான நல்லாட்சி என்ற அரசாங்கத்துக்கும் கோட்டாபய , விக்கிரமசிங்க அரசாங்கங்களுக்கும் எந்த வித்தியாசத்தையும் காணமுடியவில்லை. போர் முடிவுற்று இத்தனை வருடங்கள் கடந்துள்ள நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதாகக் கூறிவந்த ஆட்சியாளர்கள் சர்வதேசத்தை ஏமாற்றிவந்துள்ளனர்.

2010ஆம் ஆண்டு, இலங்கையின் மனித உரிமைகள் விடயத்தில், தமக்கு ஆலோசனை வழங்க நிபுணர்கள் குழுவொன்றை, ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்தார். அதனை நியமிக்க அவர் நடவடிக்கை எடுக்கும் போதே, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை மஹிந்த நியமித்தார்.

2011ஆம் ஆண்டு, அந்த ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகியது. அந்தப் பரிந்துரைகளை நிறைவேற்றுவதை, மஹிந்த புறக்கணித்தே வந்தார். அப்போதும், தாம் உலகை ஏமாற்றுகிறோம் என, அவர் நினைத்ததாகத் தெரியவில்லை.அதன் காரணமாகவே, 2012ஆம் ஆண்டு முதல், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை, வருடாந்தம் இலங்கை தொடர்பாக பிரேரணைகளை நிறைவேற்றுகிறது. அந்தப் பிரேரணைகளிலும், இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இராஜதந்திர விடயங்களில், ஒரு நாட்டின் நம்பகத்தன்மையானது பெரிதும் முக்கியமானதாகும். வல்லரசுகள் நம்பகத்தன்மையோடு நடந்து கொள்ளாமை வேறு விடயம். ஆனால், இலங்கை போன்ற சிறிய நாடுகள், சர்வதேசங்களுடன் உறவுகளைப் பேணும் போது, நாம் நம்பகத்தன்மையோடு நடந்துகொள்ளாவிட்டால், அது பாதிக்கலாம். இதைத் தற்போதைய தலைவர்கள் மட்டுமல்லாது, கடந்த அரசாங்கத்தின் தலைவர்களும் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. 2015ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குச் சென்ற, கடந்த அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பொறுப்புக் கூறல் விடயத்துக்காக இலங்கை மற்றும் பொதுநலவாய அமைப்பு நாடுகளின் நீதிபதிகளைக் கொண்ட பொறிமுறையை அமைக்க உடன்பட்டார்.

அதன் பின்னர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சர்வதேச ரீதியில் பெரிதும் பாராட்டப்பட்டார். ஆனால், மூன்று மாதங்களுக்குப் பின்னர், பி.பி.சி.பேட்டியொன்றில், "வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இடமளிப்பதில்லை" - என்றார். சில மாதங்களுக்குப் பின்னர், அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அதேபோல் மாறிவிட்டார். காணாமல் போனவர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக ஓர் அலுவலகத்தை நிறுவுவதாக, முன்னைய அரசாங்கத்தின் தலைவர்கள் 2015 ஆண்டு மனித உரிமைகள் பேரவைக்கு வாக்குறுதி அளித்தனர். எனினும், 2018ஆம் ஆண்டே அதனை நிறுவினர். அவர்கள் இதயசுத்தியுடன் அந்த வாக்குறுதியை அளிக்கவில்லை என்பதையே இந்தத் தாமதம் காட்டியது.இப்போதும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பரிந்துரைகளை நிராகரித்து சர்வதேசத்தையும் , தன்னைத்தானும் ஏமாற்றிக்கொண்டேயிருக்கிறது கொழும்பு.

# 'கீழ் முதுகு வலி'- தீர்வென்ன?



எலும்புகளின் பலவீனம் காரணமாக வலி ஏற்படலாம். மன உளைச்சல், மனச் சோர்வு ஆகிய காரணங்களினால் வலி ஏற்படலாம். கீழ் முதுகு வலி என்ற பாதிப்பைப் பற்றி ஒருமுறையாவது உலகில் சொல்லாதிருப்பவர்கள் மிகக்குறைவு எனலாம். அதுவும் இந்தக் காலகட்டத்தில் கம்ப்யூட்டர் முன் உட்கார்ந்திருப்பவர்களுக்கு இது சர்வ சாதாரணமாய் ஏற்படும் பாதிப்பாகும்.

நாம் கொடுக்கும் அழுத்தம் தசை நார்களிலும், தசைகளிலும் அத்தகைய ஒரு பாதிப்பை ஏற்படுத்துகின்றது.இது போக, உள் உறுப்புகளான வயிறு, ஓவரிஸ், சிறுநீரகம் போன்ற சில கீழ் முதுகு பகுதிகளும் தண்டு வடமும் அதிக பாதிப்புக்குள்ளாகும்போது பின் கீழ் முதுகு வலி ஏற்படுகின்றது. இரு பாலாரும் இத்தகு பாதிப்பிற்கு உள்ளாவர். என்றாலும், பெண்களுக்கு கூடுதலாகவே காணப்படுகின்றது. இது பெண்களின் உடலில் ஏற்படும் ஹோர்மோன் மாறுதல்களால் இருக்கலாம்.

தசைகளும் தசை நார்களும் பாதிக்கப்படுவதால் ஏற்படும் வலியே அநேகமாக முக்கிய முதல் காரணமாக இருக்கின்றது. அதிக நேரம் ஒரே இடத்தில் அமர்ந்திருப்பது, முறையற்று எடைகளைத் தூக்குவது, வேகம் வேகமாய் திரும்புவது, கோணல், மாணலாய் அமர்வது இவை அனைத்தும் வலி ஏற்படவும் பாதிப்பிற்கும் காரணமாகின்றன.

**கர்ப்ப காலம்:**

இக்காலத்தில் ஏற்படும் ஹோர்மோன் மாறுபாடுகளாலும் கருப்பை விரிவடைவதாலும் கீழ் முதுகு வலி ஏற்படுகின்றது.இதுபோன்றே மாதவிடாய் ஏற்படும் காலங்களிலும் ஹோர்மோன் மாறுபாடுகளால் கீழ் முதுகு வலி ஏற்படுகின்றது.

**என்டோமெட்ரியோசியஸ்:**

கர்ப்பப்பைக்கு வெளிவரும் திசுக்கள் என்டோமெட்ரியோசியஸ் எனக் குறிப்பிடப்படுகின்றது. இது இடுப்பு, கீழ் முதுகு பகுதிகளில் மாதவிடாய் காலங்களில் கடும் வலியை ஏற்படுத்தும். எலும்புகளின் பலவீனம் காரணமாக வலி ஏற்படலாம்.

**★ உடலின் ஒரு பக்க வலி**

கால், இடுப்பு பகுதிகளில் வலி, கழுத்தைத் திருப்பும் - நகர்த்தும் போது ஏற்படும் வலி. இவற்றுக்கு தண்டுவட பாதிப்பு இருக்கின்றதா எனப் பரிசோதித்துக்கொள்ள வேண்டும்.

★ மன உளைச்சல், மனச் சோர்வு காரணத்தினால் வலி ஏற்படலாம்.

★ நிமிர்ந்து நேராய் அமர பழக வேண்டும்.

★ எடைகளைத் தூக்கும்போது கவனம் தேவை.

★ அதிக உணர்ச்சிவசப்படுதலை கண்டிப்பாய் தவிர்க்க வேண்டும்.

★ வலியை அலட்சியப்படுத்தாது ஆரம்ப நிலையிலேயே மருத்துவ கவனம் பெற வேண்டும்.

★ சுறுசுறுப்பான வாழ்க்கை முறை வேண்டும். மணிக்கொரு முறை சில நிமிடங்களாவது நடக்க வேண்டும்.

**சிறுநீரகம்:**

இரு சிறுநீரகங்களும் இருபுறமாக மார்பக கூட்டின் கீழ் உள்ளன. உடலில் அதிக நீர், கழிவு இவற்றை வெளியேற்றுகின்றன, தாதுக்களை சீராய் வைக்க உதவுகின்றன. சிவப்பு இரத்த அணுக்கள் உருவாகின்றன. இரத்த அழுத்தத்தை சீராய் வைக்கின்றன. எலும்புகள் ஆரோக்கியமாய், வலுவாய் இருக்க உதவுகின்றன. சிறுநீரகத்தில் பாதிப்பு என்றாலே மிக அதிக கவனம் செலுத்த வேண்டிய ஒன்றுதான். ஆகவே தான் சில அறிகுறிகள் ஏற்படும்போது மிக அதிக கவனம் செலுத்த வேண்டும். அவ்வகையில் சிறுநீரில் கீழ்க்கண்ட அறிகுறிகள் ஏற்பட்டால் மருத்துவரின் கவனம் பெற வேண்டும்.

**★ சிறுநீர் வெளியே செல்வதில் கடினம்.**

★ வெளிறிய சிறுநீர், அடிக்கடி அதிகளவு சிறுநீர் வெளிச் செல்லுதல்.

★ நுரைத்த சிறுநீர்.

★ அடர்ந்த நிற சிறுநீர், மிகக் குறைந்த அளவே சிறுநீர் செல்லுதல்.

★ இரவில் அடிக்கடி சிறுநீர் செல்லுதல் ஆகிய அறிகுறிகள் இருந்தால் உடனடியாக மருத்துவரின் கவனம் பெற வேண்டும்.

**வீக்கம்:**

சிறுநீரகத்தின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருக்கும்போது சிறுநீரகத்தினால் உடலில் உள்ள அதிக நீரை வெளியேற்ற முடியாது. அப்போது முகம், மூட்டுகளில் வீக்கம் ஏற்படும். வாயில் உலோகம் போன்ற சுவை, கழிவுகள் வெளியேறாமல் இரத்தத்தில் இருப்பதால் ஒரு வித்தியாசமான சுவை உணர்வு நாக்கில் தெரியும். சிறுநீரகம் அதிகம் பாதித்திருந்தால் இந்தச் சுவை உணர்வு கூடுதலாய் தெரியும். பசி இருக்காது. மேல் முதுகு வலி, சிறுநீரக பாதிப்பு, கிருமி பாதிப்பு, சிறுநீரக கல் இவை கடும் வலியை ஏற்படுத்தும்.

**சோர்வு:**

சிறுநீரகங்கள் ஆரோக்கியமாக இருந்தால் சிவப்பு அணுக்கள் உற்பத்தியும் நன்கு இருக்கும். சிறுநீரகங்கள் பாதிக்கப்படும்போது அதிக சோர்வு, தசைகள் பாதிப்பு, மூளை பாதிப்பு ஆகியவை ஏற்படும்.

**மூச்சு வாங்குதல்:**

சிறுநீரகப் பாதிப்பு ஏற்படும்போது மூச்சு வாங்குதல் இருக்கும். சிகப்பு இரத்த அணுக்கள் குறைபாட்டினால் ஒட்சிசன் குறைபாடு ஏற்படுவதால் மூச்சுவாங்கும். கவன ஈடுபாடு இராது, தலைச்சுற்றல் இருக்கும். மூளைக்கு ஒட்சிசன் குறைபாடு ஏற்படுவதால் கவன ஈடுபாடு இன்மை, தலைச்சுற்றல் ஏற்படும்.

**சரும பாதிப்பு:**

கழிவுகள் இரத்தத்தில் தேங்குவதால் அரிப்பு, வறட்சி, சருமப் பாதிப்பு என ஏற்படும். மேற் கூறியவை எல்லாம் ஆபத்தான சிறுநீரகப் பாதிப்பின் வெளிப்பாடுகள் தான். வருடம் ஒருமுறை எப்போதுமே அனைவரும் செக்கப் செய்துகொள்வது பல பிரச்சினைகளில் இருந்து நம்மை பயக்கும்.

**மக்னீசியம்:**

ஒருசில சத்துக் குறைபாடுகளால் ஏற்படும் அறிகுறிகளை நாம் கவனிக்கத் தவறி விடுகின்றோம். ஒரு சத்துக் குறைபாடே பலவிதமான பாதிப்புகளை ஏற்படுத்தி விடும். இன்றைய ஆய்வுகள் சத்துக் குறைபாடுகளைப் பற்றியும், அதனால் ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் நிறைய ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளன. இதனை வெளியிட்டும் வருகின்றன. அதில் மக்னீசியம் குறைபாட்டைப்பற்றியும் அதனால் ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் வெளியிடப்பட்டுள்ளன. கருத்துகள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. மக்னீசியம் உடலுக்கு மிக அவசியமானது. இதனை உணவிலிருந்து பெறுவது மிகக் கடினமானது அல்ல. விதைகள், கொட்டைகள், அடர்ந்த நிறம் கொண்ட கீரைகள், பீன்ஸ் இவையெல்லாம் மக்னீசியம் சத்து நிறைந்தவையே.

**மக்னீசியம் குறைபாடு என்னென்ன அறிகுறிகளைக் காட்டும் என்பதைப் பார்ப்போம்.**

பலமின்மை.... தடுமாற்றம்... மறதி... குழப்பம்... கல்லீரல் மற்றும் சிறுநீரகப் பாதிப்பு... விழுங்குவதில் கடினம்... கல்சியம் பற்றாமை... எலும்பு தேய்மானம்... சர்க்கரை அளவு குறைதல்... படபடப்பு... குடலில் கெட்ட கிருமிகள்... செயற்பாடுகளில் நிறுத்தம் ஏற்படுதல்... சிறுநீர்ப்பை வீக்கம்.... கட்டிகள்... தசைகளில் பலவீனம்... எதுவுமே முடியவில்லை என்ற நிலை... உயர் இரத்த அழுத்தம்... சரியான தூக்கமின்மை... கர்ப்ப காலத்தில் பிரச்சினை... தலைவலி... வலிப்பு... ஆஸ்மா. பொட்டாசியம் குறைபாடு... பல் சொத்தை. அதிக குழப்பம்... தலைவலி... இரத்த கொத்துகள்... ரேடான்ட்ஸ் குறைபாடு பாதிப்பு... நடுக்கம்... நீரிழிவு நோய் பிரிவு 2... குண மாறுபாடுகள்... இருதயக் கோளாறுகள்... மூச்சு மண்டல பிரச்சினைகள் என இவ்வளவு பாதிப்புகளைக் காட்டும்...

பூசணி விதை, சியா விதை, பாதாம், பசலி, முந்திரி,வேர்க்கடலை, சோயாபால், முழுதானியங்கள் மூலம் இதனை நாம் பெற முடியும். மேலும் ஆப்பிள், பீன்ஸ்பிரிவுகள்,பால், வாழைப்பழம், கறுப்பு திராட்சை, கரட் இவைகளும் மக்னீசியம் சத்துக் கொண்டவை ஆகும். அன்றாடம் 30 நிமிட நடை பயிற்சியின் அவசியம் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இருதய பாதிப்புகள் குறையும்; எடை சீராய் இருக்கும்; மன அழுத்தம் குறையும்; சக்தி கூடும்; இரத்த ஓட்டம் சீராகும்; மனநிலை நன்கு இருக்கும்; படபடப்பு நீங்கும்; தொள தொளவென்ற உடல் இருக்காது; தூக்கம் நன்கு வரும்; புற்று நோயைத் தவிர்ப்பதற்கு உதவும்; உடல், கை, கால் ஒரு சேர இயங்கும்; தசைகளும், எலும்புகளும் வலுப்பெறும்; நீரிழிவு பிரிவு 2 பாதிப்பு குறையும்; நோய் எதிர்ப்பு சக்தி கூடும்; உயர் இரத்த அழுத்தம் கட்டுப்படும். ஆக நடை பயிற்சியை விடாது செய்வோம்.

*நன்றி:மாலைமலர்*

## இன்றைய நாளில்...

- ★ 1954 – சோவியத் ஒன்றியம் அணுவாயுதச் சோதனையை மேற்கொண்டது.
- ★ 1959 – சோவியத்தின் லூனா 2 விண்கலம் சந்திரனில் மோதியது. சந்திரனில் இறங்கிய மனிதனால் அமைக்கப்பட்ட முதலாவது விண்கலம் இதுவே.
- ★ 1960 – எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு (ஓப்பெக்) உருவாக்கப்பட்டது.
- ★ 1984 – ஜோ கிட்டிங்கர் வளிமக் கூண்டில் அட்லான்டிக் பெருங்கடலைத் தாண்டிய முதல் மனிதர் என்ற சாதனை படைத்தார்.
- ★ 2000 – விண்டோஸ் மில்லேனியம் வெளியிடப்பட்டது.
- ★ 2005 – நடிகர் விஜயகாந்த் தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் என்ற புதிய அரசியற் கட்சியை ஆரம்பித்தார்.
- ★ 2015 – ஈர்ப்பு அலைகள் குறித்த முதலாவது அவதானிப்பு அறிவிக்கப்பட்டது.

## நக்கல் நமசிவாயம்

ரயிலில் உயிரிழந்த இளைஞனின் மரணத்திற்கு தொழிற்சங்கம் பொறுப்பென்று அமைச்சர் பந்துல சொல்கிறார்.. அப்போ மினிஸ்டர்மார் பாவம்.. அவங்கள் பொறுப்பில்லைப்போல ..



# சகல வணிகங்களும் QR குறியீட்டில் பதிவாக விசேட குழு பரிந்துரை



இணையத்தளம் வழியாக இலங்கைக்குள் மேற்கொள்ளப்படும் பாரியளவிலான சில வணிகச் செயற்பாடுகளால் அரசாங்கத்துக்கு எவ்வித வருமானமும் கிடைப்பதில்லையென்றும் இதன் காரணமாக இந்நாட்டில் உள்ள சகல வணிகங்களையும் ஒரு கட்டமைப்பின் கீழ் பதிவு செய்வதற்கான பொறிமுறையொன்று விரைவில் தயாரிக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி மதுர விதானகே தெரிவித்தார்.

இலங்கையின் வணிகத் தொழில்முயற்சிகளை இலகு படுத்தும் சுட்டெண்ணின் பெறுமானத்தை அதிகரிப்பது தொடர்பில் எழுந்துள்ள நடைமுறைச் சிக்கல்களையும் சிரமங்களையும் ஆய்வுசெய்வதற்கும் அது தொடர்பில் முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு அண்மையில் கூடியபோது அதற்குத் தலைமைதாங்கி கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வணிகப் பதிவு செய்யும் நடைமுறையில் காணப்படும் சிக்கல்கள் மற்றும் இந்தச் செயற்பாட்டை வினைத்திறனாக மேற்கொள்வது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

அரசாங்க ஊழியர்கள் மத்தியில் தொழில்முனைவு மனப்பான்மையை உருவாக்குவதன் மூலம் மிகவும் பயனுள்ள சேவையை பெற முடியும் எனக் குழுவின் தலைவர் குறிப்பிட்டார். நாடளாவிய ரீதியில் அரச ஊழியர்களை ஒழுங்காகவும் நியாயமாகவும் பணியமர்த்துவதன் முக்கியத்துவம் குறித்தும் இங்கு ஆராயப்பட்டது.

பிரதேச செயலகக் கட்டமைப்பில் உள்ள சில குறைபாடுகள் காரணமாக வழங்கப்படும் சேவைகளின் வினைத்திறன் தொடர்பில் பிரச்சினைகள் எழுந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் உள்ள ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் அரசாங்க ஊழியர்கள் ஒரே முறையின் கீழ் செயற்பட வேண்டியதன் அவசியத்தை குழுவில் ஆஜராகியிருந்த அரசாங்க அதிகாரிகள் வலியுறுத்தினர்.

இதற்கு இந்நிறுவனங்களுக்கு உரிய வழிகாட்டுதல்கள் வழங்கப்படுவது இன்றியமையாதது என்றும், அரசாங்கப் பொறிமுறையை வினைத்திறனாக்குவதன் மூலம் மக்களுக்கு உயர்தர மற்றும் நட்புறவான சேவையை வழங்க முடியும் என்றும் அதிகாரிகள் கருத்து தெரிவித்தனர்.

அத்துடன், அரசியலமைப்புக்குள் உப பிரிவாக அல்லது அந்தந்த அமைச்சுகள் பெயரிடப்பட்டால் அவற்றின் நீண்டகால, மாறாத தீர்மானங்களை எடுக்கமுடியும் என அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். அதேநேரம், பல்வேறு திறமைகளைக் கொண்ட அரசாங்க அதிகாரிகளை அரசாங்க சேவைக்கு இணைத்துக் கொள்வது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

வணிகப் பதிவு நடவடிக்கைகளை ஒரு மணி நேரத்துக்குள் பூர்த்தி செய்யக்கூடிய திறமையான முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டும் எனக் குழுவின் தலைவர் தெரிவித்தார். இதற்கமைய இலங்கையில் உள்ள அனைத்து வணிகங்களும் QR குறியீட்டின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும் எனக் குழு பரிந்துரைத்தது.

குறிப்பிடப்படாத வகையில் செயற்படும் அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராக எடுக்கக் கூடிய நடவடிக்கை அரசாங்க நிர்வாகச் செயற்பாட்டுக்கு உட்பட்டதாக இடம்பெறுகிறதா எனக் குழுவின் தலைவர் அதிகாரிகளிடம் வினவினார். இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் அல்லது தாபன விதிக்கோவை போன்றவற்றின் ஊடாக நடவடிக்கை எடுக்க முடியும் என அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இந்தக் குழுக் கூட்டத்தில், இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார், பாராளுமன்ற உறுப்பினர்களான சஞ்சீவ எதிரிமான்ன, மொஹமட் முஸம்மில், கோகிலா குணவர்தன ஆகியோரும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு, நிறுவனப் பதிவாளர் திணைக்களம் உள்ளிட்டவற்றின் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் எழுதிய 'சிதமு' (சிந்திப்போம்) எனும் நூலின் பிரதியொன்றை பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ்-ஷெய்க் எ.ஸீ.அகார் முஹம்மத் (நளீமி) யிடம் நூலாசிரியர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் ஜாமியா நளீமிய்யா கலாபீடத்தில் வைத்து கையளித்தபோது பிடிக்கப்பட்ட படம்.

படம்: பேருவளை பீ.எம்.முக்தார்





அரநாயக்க திப்பிட்டிய முஸ்லிம் வித்தியாலயத்தில் மூன்றாவது சாரணர் குழு அங்குரார்ப்பணமும் சாரணர் சின்னம் சூட்டுதல், கழுத்துப்பட்டி அணிவித்தல் நிகழ்வுகள் கல்லூரி கேட்போர் கூடத்தில் அண்மையில் அதிபர் எம்.ரம்ஸான் நளீமி தலைமையில் நடைபெற்றது. பாடசாலை சாரணர் ஆசிரியர்களான நூர்நிஸா, எம்.ஷபீர் ஆகியோரின் ஒத்துழைப்போடு நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்ட சாரண ஆணையாளர் பிரசாத் வில்பொல, மாவட்ட பிரதி ஆணையாளர்களான உத்பொல பியசேன, எஸ்.ஹேரத் மற்றும் சாரண பிரமுகர்களாக நந்தலால், ரிப்கா உஸ்மான், சர்வோதி ரத்ன சூரியா ஆகியோருடன் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் சைத் உசைன், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

படங்கள்: பாரா தாஹீர்

# பெருந்தோட்ட தாக்குதல் சம்பவங்களை முடிவுறுத்த சகல தரப்புகளையும் அழைத்து அவசர மாநாடு கூட்டுக

## த.மு.கூ. தலைவர் மனோ ஜனாதிபதி ரணிலுக்கு கடிதம்



இரத்தினபுரி மாவட்ட கஹவத்தை பெருந்தோட்ட நிறுவன வெள்ளந்துரை தோட்டம், இதற்கு முன் மாத்தளை மாவட்டத்தில் நடைபெற்ற தாக்குதல் சம்பவங்கள் முடிவுக்கு வரவில்லை. இவை தொடர்கின்றன. இரத்தினபுரி, மாவட்ட செயலாளர் வசந்த குணரத்ன, "பெருந்தோட்டங்களுக்கு உள்ளே செயற்பட முடியவில்லை. தயவு செய்து அரசியல் உயர் மட்டத்தில் பேசி நடைமுறை அதிகாரத்தை பெற்றுத்தாருங்கள்" என என்னிடம் கோரினார். பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண "இந்த கம்பனிகாரர்களை கட்டுப்படுத்த முடியவில்லை" என்று ஜனாதிபதியிடம் முறையிடும்படி என்னிடம் கூறினார்.

இவை தொடர்பில் உங்களிடம் தொலைபேசியில் உரையாடியபோது, எழுத்து மூலமான ஒரு முன்மொழிவை தரும்படி கேட்டீர்கள். அதன்படி அனைத்து தரப்பினரையும் அழைத்து அவசர மாநாடு நடத்தி, இந்த தாக்குதல் சம்பவங்களுக்கு நிரந்தரமான தீர்வை காணும்படி உங்கள்மூலம் கோருகிறேன் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மனோ கணேசன் எம்.பி. தன் கடிதத்தில் மேலும் கூறியுள்ளதாவது,

ஜனாதிபதி, பொது நிர்வாக அமைச்சர் பிரதமர் தினேஷ் குணவர்தன, பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண, பொலிஸ்துறை அமைச்சர் டிரான் அலஸ், அரசு-எதிரணி தரப்புகளை சார்ந்த ஒன்பது மலையக எம்.பிக்கள், கொழும்பு-களுத்துறை-கேகாலை-இரத்தினபுரி-நுவரெலியா-கண்டி-மாத்தளை-பதுளை-மொனராகலை-காலி-மாத்தறை-குருநாகல் ஆகிய 12 மாவட்டங்களின் செயலாளர்கள், பொலிஸ் மாஅதிபர், 22 பெருந்தோட்ட நிறுவன மேலாளர்கள், உள் குத்தகை பெற்றுள்ள தோட்ட நிறுவன மேலாளர்கள், 3 அரச பெருந்தோட்ட அதிகாரிகள், மலையக சிவில் சமூக பிரதிநிதிகள் ஆகியோரை ஜனாதிபதி செயலகத்துக்கு அழைத்து அவசர மாநாட்டை நடத்தி நிரந்தரத் தீர்வை காணுங்கள்.

இரத்தம், வியர்வை சிந்தி இந்நாட்டை வளப்படுத்திய பெருந்தோட்ட மக்கள், இன்று 200 வருடங்களை இந்நாட்டில் நிறைவு செய்கிறார்கள். இந்நாட்டின் பொருளாதாரத்துக்கான அவர்களது பங்களிப்பை குறைத்து மதிப்பிட முடியாது. மலையக தமிழர்கள் மத்தியில் பெருந்தோட்டங்களில் வாழ்கின்ற இம்மக்கள், எனது தொகுதி கொழும்பு, அவிசாவளை முதல் சுமார் பன்னிரெண்டு மாவட்டங்களில் படும்பாடு மிக மோசமானதாகும். நீதிமன்ற ஆணை இல்லாமல் அவர்களது வீடுகள் உடைக்கப்படுகின்றன. ஆங்காங்கே நடைபெற்ற சம்பவங்கள் இப்போது பரவலாக நடைபெறுகின்றன. பல சம்பவங்கள் பகிரங்கமாவதில்லை. ஒருசிலவே வெளியில் தெரிய வருகின்றன.

தோட்டங்களில் வாழும் மக்களுக்கான வசிப்பிட, வாழ்வாதார காணி உரிமை தொடர்பில் நாம் கூடி பேசி கொள்கை முடிவு எடுக்க வேண்டும். அவை மாவட்ட செயலாளர்களுக்கும் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட வேண்டும். தயவுசெய்து அவசர மாநாட்டை உங்கள் தலைமையில் கூட்டுங்கள்.

# ரயில்வே திணைக்கள ஊழியர் படுகொலை

## இரத்மலானையில் சம்பவம்



இரத்மலானையில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ரயில்வே திணைக்கள ஊழியர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கல்கிஸ்ஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரத்மலானை தொடருந்து குடியிருப்பில் அமைந்துள்ள வீட்டினுள் வைத்து நேற்றுமுன்தினம் (12) கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட நிலையில் குறித்த நபர் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் மாத்தறை, பியகஹா பகுதியைச் சேர்ந்த 41 வயதானவர் எனவும் அவர் ரயில்வே குடியிருப்பில் தற்காலிகமாக வசித்து வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணை தனிப்பட்ட தகராறு காரணமாக ரயில்வே திணைக்கள ஊழியரை ஒருவர் கத்தியால் குத்தியதாக பொலிஸார் கூறியுள்ளனர். தனது மனைவியுடன் தவறான உறவை கொல்லப்பட்டவர் வைத்திருந்தாரெனவும் அது கையும் மெய்யுமாக பிடிபட்டதால் இந்தக் கொலையை மேற்கொண்டதாகவும் கொலையாளி பொலிஸ் விசாரணைகளில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் சடலம் பிரேத பரிசோதனைக்காக களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை கல்கிஸ்ஸை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# புதிய வரி செலுத்துனர்களைப் பதிவுசெய்ய இறைவரித் திணைக்களத்தினால் விசேட திட்டம்



உழைக்கும்போது செலுத்தும் வரி தொடர்பில் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் திருத்தங்களைச் சமர்ப்பிப்பதற்கு தலையீடு செய்வதாகப் பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தெரிவித்தார்.

வரித்திருத்த நடவடிக்கையின்போது பாதிக்கப்படும் தொழிற்சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி தொழிற்சங்கங்கள் சிலவற்றுடன் கலந்துரையாடுவதற்காக பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அண்மையில் பாராளுமன்றத்தில் கூடியிருந்தது.

வரித் திருத்தங்களினால் எதிர்பார்ப்புகள் மற்றும் நோக்கங்கள் நிறைவேறி உள்ளனவா, இவற்றின் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட வருமானம் அடையப்பட்டுள்ளதா போன்ற விடயங்கள் குறித்து தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் நீண்டநேரம் கலந்துரையாடல் இடம்பெற்றது. வரித் திருத்தத்தின்போது உழைக்கும்போது செலுத்தும் வரியில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தினால் பல தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

இதுவரை வரிச் செயற்பாடுகளுடன் தொடர்புபடாத நபர்களைத் தொடர்புபடுத்திக் கொள்வதற்கு விசேட வேலைத் திட்டமொன்றை ஆரம்பிக்கவிருப்பதாக இங்கு கருத்துத் தெரிவித்த உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்கமைய, புதிய வரி செலுத்துவோரைக் குழுவாகப் பதிவுசெய்யும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டனர்.

வரிப் பிரச்சினைகள் காரணமாக பல்வேறு துறைசார் நிபுணர்கள் நாட்டைவிட்டு வெளியேறுகின்றமையையும் குழு ஏற்றுக் கொண்டது. இதற்கமைய, அரசாங்கம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பில் வலியுறுத்துவதாகவும் குழு தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கு உறுதியளித்தது.

ஒவ்வொரு தொழிலுக்கும் எவ்வாறு வரி விதிக்கப்பட வேண்டும் என்பது குறித்த கொள்கையை தயாரித்து எதிர்காலத்தில் அல்லது வரி திருத்தங்கள் இடம்பெறும்போது அதனை பாராளுமன்றம் ஊடாக சட்ட ஆவணமாக மாற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தையும் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கமைய, உழைக்கும்போது செலுத்தும் வரியில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் குறித்த அறிக்கையை சகல தரப்பினரின் இணக்கப்பாட்டுடனும் இரண்டு வாரங்களுக்குள் தயாரித்து வழங்குமாறும் துறைசார் மேற்பார்வைக் குழு தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தது.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகர, கயாஷான் நவனந்த, (சட்டத்தரணி) வசந்த யாப்பா பண்டார ஆகியோர் கலந்து கொண்டிருந்ததுடன், சுமார் 25 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சுயாதீன கண்காணிப்பாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (13.09.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 201.2554 | 212.3544 |
| கனேடியன் டொலர் | 232.0726 | 243.6033 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 43.0743 | 45.6387 |
| யூரோ | 338.9680 | 354.8790 |
| ஜப்பான் யென் | 2.1413 | 2.2400 |
| சிங்கப்பூர் டொலர் | 231.3853 | 242.5885 |
| ஸ்ரேலிங் பவுன் | 394.4617 | 411.5342 |
| சுவிஸ் பிராங் | 352.3078 | 371.1555 |
| ஐ.அ. டொலர் | 316.7737 | 328.5308 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 855.1708 |
| குவைட் | குவைட் தினார் | 1,044.4577 |
| ஓமான் | ஓமான் றியால் | 837.3892 |
| கட்டார் | கட்டார் றியால் | 88.4366 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85.9468 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87.7756 |


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.09.11
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5234
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,003,312.00
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 7 9 4 5 2 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3476
சீட்டிழுப்பு திகதி 2023.09.11
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,503,772.80
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 01 04 12 30
விசேட எழுத்து I
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 33226

Lucky 7
திகதி 11.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0060
வெற்றி இலக்கினம் துலாம்
L7 இலக்கம் 1 4
வெற்றி இலக்கங்கள் 3 4 5 3 9 1
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,825,305.92

தன நிதானய
தேதி 2023/09/11
சீட்டிழுப்பு இலக்கம் 1264
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 109,546,752.80
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 08 49 62 76
விஷேசட ஆங்கில எழுத்து O
Double Chance இலக்கம் 06517

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 543
சீட்டிழுப்பு திகதி 2023-09-11
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,444,967.20
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 26 27 30 37
விசேட இலக்கினம் விருச்சிகம்

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1582
11/09/2023
Double Chance 51152
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 407,420,480.00
ஆங்கில எழுத்து I
சுப்பர் இலக்கம் 22
வெற்றி இலக்கங்கள் 09 12 47 77
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

## விசேட தேவையுடையவருக்கு சமுர்த்தி திட்டத்தால் வீடு கையளிப்பு



கண்டி நிருபர்

அக்கரப்பத்தனை டொரிங்டன் தோட்டத்தில் வசிக்கும் விசேட தேவையுடைய ஒருவருக்கு சமுர்த்தி வங்கி, திரியபியச வீடமைப்புத் திட்டத்தின்மூலம் வீடொன்று நேற்றுமுன்தினம் (12) அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு நான்கு இலட்சம் ரூபா பொருட்செலவும் சமுர்த்தியாளர்களது உழைப்பும் பயன்படுத்தப்பட்டுள்ளன. புதிய வீடு நிர்மாணிக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் லிந்துல சமுர்த்தி காரியாலயத்தின் முகாமையாளர் திருமதி தாரனி மகேந்திரன், உதவி முகாமையாளர் ஜெ.ரவி ஜெயகாந்தன் கிராமசேவகர் ஆர்.குழந்தைவேல் மற்றும் பிரதேச சமுர்த்தி உத்தியோகத்தர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

## பஸ் சாரதி - நடத்துனர் தட்டுப்பாடு; போக்குவரத்து சேவைகள் இடைநிறுத்தம்

ஏ.ஏ.எம்.பாயிஸ்

இலங்கை போக்குவரத்துச் சபையின் பலாங்கொடை பஸ் டிப்போவில் நிலவும் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துனர் தட்டுப்பாடு காரணமாக பல வீதிகளில் பஸ் போக்குவரத்துகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் பாடசாலை மாணவர்கள் ஏனைய தொழில்துறையினர் மற்றும் பொதுப் பயணிகள் பெரிதும் சிரமத்துக்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பலாங்கொடை நகரிலிருந்து கொழும்பு, இரத்தினபுரி, உடரங்வல, பொல்தும்பே தேவாலயம், வெலிஓய, இம் புலாமுர, ஹெலவத்த போன்ற இடங்களுக்கான போக்குவரத்துச் சேவைகளே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து பலாங்கொடை டிப்போ முகாமையாளர் தர்மஸ்ரீ ஹரிஸ் சந்திர தகவல் தருகையில், இந்த டிப்போவில் தற்போது 15 பஸ் சாரதிகள், 25 நடத்துனர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன. இதனால் பல இடங்களுக்கான போக்குவரத்து சேவைகளை நடத்த முடியாதுள்ளது எனத் தெரிவித்தார்.

## அரிசியை கூடுதல் விலைக்கு விற்ற நால்வருக்கு எதிராக வழக்கு தாக்கல்

ஏ.ஏ.எம்.பாயிஸ்

அரிசியின் விலையை கட்டுப்பாட்டு விலையையும் மீறி கூடுதலான விலைக்கு விற்பனை செய்த வியாபாரிகள் நால்வருக்கெதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

பலாங்கொடை, கூரகல, வெலகபொல ஆகிய இடங்களைச் சேர்ந்த 04 வியாபாரிகளுக்கு எதிராகவே இந்த வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என இர த்தினபுரி மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை காரியாலய முகாமையாளர் உதய நாமல்கம நேற்று முன்தினம்(12) தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில் நிலவிய வறட்சி நிலை காரணமாக நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டதால் அரிசியின் விலைகள் அதிகரித்துள்ளதாக நெல் ஆலைகளின் உரிமையாளர்கள் மற்றும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். இவை ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்துகள் அல்ல எனவும் அரிசியின் விலைகளை அதிகரித்து விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதே தமது கடமை எனவும் இவர்களுக்கு எதிராக ஒரு இலட்சம் ரூபா முதல் 5 இலட்சம் ரூபா வரை அபராதம் விதிக்க சட்டத்தில் இடமுண்டெனவும் அவர் தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக் காரியாலய அதிகாரிகள் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com

## கலுகமுவ முஸ்லிம் மத்திய கல்லூரிக்கு ஜனாதிபதி பதக்கம்



கெலிஓயா, கலுகமுவ முஸ்லிம் மத்திய கல்லூரி மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சூழல் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் சுற்றாடல் முன்னோடி இணைப்பாட விதான செயற்றிட்டத்தில் ஜனாதிபதி பதக்கத்தைப் பெற்றுள்ளது.

இதில் தரம் 11 இல் கல்வி பயிலும் மாணவிகளான ஏ.எம்.மரியம் லீனா, எம்.என்.நூருல் ஹிக்மா, எம்.ஏ.எவ்.பர்ஹா, பி.எவ்.சஹாமா, எம்.எஸ்.சல்மா, எம்.எஸ்.எவ்.சஹானா ஆகியோர் ஜனாதிபதி பதக்கத்தைப் பெற்றுள்ளனர்.

இவர்களை அதிபர் இஸட்.ஏ.ஆரிப் அஹமட்டின் வழிகாட்டலில் பொறுப்பாசிரியைகளான எம்.ஆர். எஸ்.பரூஸியா, ஜே.காமிலா ஆகியோர் நெறிப்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறுகதை தொகுப்புக்கு இந்தியாவில் கௌரவம்

கண்டி நிருபர்

மாத்தளை வடிவேலனின் "வல்லமை தாராயோ" என்ற சிறுகதை தொகுப்புக்கு இந்தியாவில் கௌரவம் கிடைத்துள்ளது. அவருக்காக இலங்கை பெறுமதியில் ஒரு இலட்சம் ரூபா பரிசுக்காகத் தெரிவாகியுள்ளது.

இதற்கான பரிசை "தாய்" சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் எம்.ஜி.ஆர் - ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முனைவர் டாக்டர் குமார் ராஜேந்திரன் வழங்கி கௌரவிக்கவுள்ளார். டாக்டர் எம்.ஜி.ஆர். ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் 'மலையகம் 200' முழு நாள் ஆய்வரங்கில் மாத்தளை வடிவேலனின் ஒரு இலட்சம் ரூபா இலக்கிய விருதை தமிழக பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



**மாத்தளை பொலிஸ் அதிகாரி காரியாலயம் அமைந்துள்ள காணி தொடர்பாக கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக இருந்துவரும் பிரச்சினையை உடன் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே நேற்று (13) தெரிவித்தார். இது தொடர்பாக மாத்தளை மாநகர சபை அதிகாரிகள் மற்றும் மாவட்டச் செயலாளர் உட்பட பல தரப்புடன் தொடர் பேச்சுகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.**

**படங்கள்:** கண்டி நிருபர்

## விவசாயிகளின் குரங்குப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு எட்டப்படும்

### அமைச்சர் ரோஹண திசாநாயக்க உறுதி



கண்டி நிருபர்

குரங்குகளால் விவசாயிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக விளையாட்டுத்துறை - இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் ரோஹண திசாநாயக்க நேற்று முன்தினம் (12) உறுதிபடத் தெரிவித்தார்.

மாத்தளை, ஒவிலிகந்த பிரதேச விவசாயிகளுக்கிடையே இடம்பெற்ற கூட்டமொன்றில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குரங்குத் தொல்லை குறித்து தொடர்ச்சியாக - நீண்டகாலமாக விவசாயிகள் முறைப்பாடுகளைத் தெரிவிக்கின்றனர். எனவே, இது தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி ஆறாம்நாள் அகழ்வாய்வு; ரஷ்யத் தயாரிப்பு நீர் சுத்திகரிப்பு கருவியொன்றும் மீட்பு



முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் ஆறாம் நாள் அகழ்வாய்வு நேற்று முன்தினம் (12) முன்னெடுக்கப்பட்ட நிலையில், கழிவுநீரைச் சுத்திகரித்து அருந்துவதற்குப் பயன்படுத்தப்படும், ரஷ்யத் தயாரிப்பு நீர் சுத்திகரிப்புக் கருவி ஒன்றும் துப்பாக்கி ரவை ஒன்றும் தடயப் பொருட்களாகப் பெறப்பட்டுள்ளன.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வாய்வுகள் நேற்று முன்தினத்துடன் ஆறு நாட்கள் இடம்பெற்றுள்ள நிலையில், 06 மனித எலும்புக்கூடு தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் மேலும் தெரியவருகையில்,

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் செப்டெம்பர் 06ஆம் திகதி புதனன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. இந்நிலையில் ஆறாம்நாள் அகழ்வாய்வுகள் நேற்று முன்தினம்(12) முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இடம்பெற்றன.

அதேவேளை, குறித்த அகழ்வாய்வுகள் தொல்லியல் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம், முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி கே.வாசுதேவா, சட்டத்தரணி கே.எஸ்.நிரஞ்சன், தடயவியல் பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஆகியோரின் பங்கேற்புடன், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டன.

ஆறாம்நாள் அகழ்வாய்வுகள் தொடர்பில் முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா கருத்துத் தெரிவிக்கையில்,

கொக்குத்தொடுவாய் ஆறாவதுநாள் அகழ்வாய்வில் ஒருமனித எலும்புக்கூட்டுத்தொகுதி முற்றுமுழுதாக அகழ்ந்தெடுக்கப்பட்டிருந்ததுடன், செப்டெம்பர் 11ஆம் திகதி திங்களன்று பகுதியளவில் அகழ்ந்தெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடு தொகுதியின் மிகுதிப் பாகங்களும் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டன.

அத்தோடு, குறித்த ஆறாம் நாள் அகழ்வாய்வில் துப்பாக்கி ரவை ஒன்றும் கழிவுநீரைச் சுத்திகரித்து அருந்துவதற்குப் பயன்படுத்தப்படும் ரஷ்யத் தயாரிப்பு நீர் சுத்திகரிப்புக் கருவி ஒன்றும் தடயப் பொருட்களாக பெறப்பட்டுள்ளன.

அதேவேளை, இவ்வாறு அகழ்ந்தெடுக்கப்படும் மனித எலும்புக்கூடு தொகுதிகள் கண்கள் கட்டப்பட்ட நிலையிலேயோ அல்லது கைகள் கட்டப்பட்ட நிலையிலேயோ மீட்கப்படவில்லை.

இந்த அகழ்வாய்வுப் பணிகள் இடம்பெறும் போது காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தின் சார்பில் இரண்டு சட்டத்தரணிகள் அகழ்வாய்வுகள் ஆரம்பமாகி முடிவடையும்வரை நேரடியாகநின்று பார்வையிடுகின்றனர்.

இதனைவிட தடயவியல் பொலிஸார் அகழ்வுப்பணிகளின்போது புகைப்படங்களை எடுத்து ஆவணப்படுத்துகின்றனர்.

இவ்வாறான சூழலில் இங்கு அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் கைகள் கட்டப்பட்டநிலையில் எலும்புக்கூடு தொகுதிகளோ, கண்கள் கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட துணிகளோ இதுவரை இனங்காணப்படவில்லை - என்றார்.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

## கலைகளைப் பேணுவதன் ஊடாகவே எமது இனத்தின் தனித்துவத்தை பேண முடியும்

### தென்மராட்சி பிரதேச செயலர் உஷா

சாவகச்சேரி நிருபர்

எமது பண்பாடு, பாரம்பரியம் மற்றும் கலைகளைப் பேணுவதன் ஊடாகவே இனத்தின் தனித்துவத்தைப் பேணிக்கொள்ள முடியும் என தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற சாவகச்சேரி-சித்திவிநாயகர் கலைமன்றத்தின் முத்தமிழ் விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி-பெரியமாவடி சித்திவிநாயகர் கலை மன்றம் யுத்த காலங்களையும் தாண்டி இன்றும் கலைச்சேவையை ஆற்றி வருவது பாராட்டத்தக்க விடயம். எமது இனத்தின் தனித்துவத்தை பேணவேண்டுமானால் முதலில் எமது கலைகளை பேணிப் பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறான கலை நிகழ்வுகள் ஊடாக எமது பண்பாடு மற்றும் கலாசாரத்தை எமது அடுத்த தலைமுறைக்கு கடத்த முடிவதுடன், சமூகத்தில் இலைமறைகாயாக இருக்கின்ற கலைஞர்களுடைய திறன்களையும் வளர்த்துக்கொள்ள முடியும்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஒவ்வொரு மாதமும் ஒரு பிரதேச செயலகத்தில் பௌர்ணமி விழாவைக் கொண்டாட வேண்டும் என அறிவித்துள்ளார். கடந்த மாதம் நல்லூர் பிரதேச செயலகத்தில் அந்த நிகழ்வு இடம்பெற்றது.

எப்போதும் தொலைபேசி, தொலைக்காட்சி என மூழ்கிக் கிடக்காது மேடை நிகழ்வுகளை ஆற்றுவது மற்றும் இரசிப்பது உளநல மேம்பாட்டுக்கு உறுதுணையாக அமையும். பாடசாலை மாணவர்களும் கல்வியுடன் ஏனைய கலை மற்றும் விளையாட்டுத் துறைகளிலும் ஈடுபட வேண்டும். இதனூடாக சிறந்த ஆளுமை, ஒழுக்கம் மிக்க சமுதாயத்தைக் கட்டியெழுப்ப



முடியும்.

தற்போது வெள்ளி மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்களும் தரம் 9 வரையான வகுப்பு மாணவர்களை தனியார் கல்வி நிலையங்களுக்கு அழைக்க முடியாதென அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இந்த விடுமுறை நாட்களில் அறநெறிப் பாடசாலை அல்லது கலை அம்சங்களில் மாணவர்கள் ஈடுபட வேண்டும் என்பதற்காகவே மேற்படி தினங்களில் தனியார் கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. எனவே பெற்றோர்கள் விடுமுறை தினங்களில் மாணவர்கள் கலை நிகழ்வுகளில் ஈடுபடுவதையும் அறநெறிப் பாடசாலை செல்வதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

தற்போது சமூகத்தில் போதைவஸ்து மற்றும் மாணவர்கள் மத்தியில் தொலைபேசி பாவனை ஆகியன பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக, தொலைபேசி பாவனையால் மாணவர்கள் மத்தியில் கவனச் சிதறல்கள் ஏற்படுகின்றன. கொரோனா காலத்தில் சகல மாணவர்களின் கைகளுக்கும் தொலைபேசி சென்றது. அது இன்றும் தொடர்கிறது. இது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை பெற்றோர்கள் உணர வேண்டும் – என்றார்.

## ஸ்மார்ட் போனுக்குத் தடை

கடமை நேரத்தில் தாதியர்கள், சுகாதார உதவியாளர்கள், பாதுகாப்புப் பணியாளர்கள் மற்றும் நோயாளர் பராமரிப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் ஸ்மார்ட் போன் பாவிக்க யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தடை விதித்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில், சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட 08 வயது சிறுமிக்கு தவறான முறையில் 'கானுலா' பொருத்தப்பட்டமையால் சிறுமியின் இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டுள்ளது.

அது தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், தாதியர்களின் கவனக்குறைவினாலேயே சிறுமியின் கை அகற்றப்பட்டதென பல தரப்பினராலும் குற்றஞ்சாட்டப்பட்டுவரும் நிலையில், பணிப்பாளர் ஸ்மார்ட் போன் பாவிக்க தடை விதித்துள்ளார்.

# சர்ச்சையில் சிக்கிய பிரான்ஸ் நட்சத்திர வீரர்



பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பிரபல கால்பந்து நட்சத்திரம் பால் போக்பா டெஸ்டோஸ்டிரோன் சோதனையில் சிக்கியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ள நிலையில், பல ஆண்டுகள் தடை விதிக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

ஜுவெண்டஸ் மற்றும் பிரான்ஸ் கால்பந்து அணி மிட்பீல்டரான பால் போக்பா டெஸ்டோஸ்டிரோன் சோதனையில் சிக்கியுள்ளதால் சிகிச்சை எடுத்துக்கொள்ள விலக்களிக்கப்படாது எனவும், இதனால் 4 ஆண்டுகள் வரையில் தடை விதிக்கப்பட வாய்ப்பிருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், போக்பா விளையாடுவதில் இருந்து தற்காலிக இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். மேலும் அவருக்கு பதிலளிக்க 3 நாட்கள் அவகாசமும் அளிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து ஜுவெண்டஸ் அணி நிர்வாகமும் நடவடிக்கை முன்னெடுக்கும் என்றே கூறப்படுகிறது.

டெஸ்டோஸ்டிரோன் என்பது ஒரு ஹோர்மோன். இது தசையின் அளவையும் வலிமையையும் அதிகரிக்க உதவுகிறது. அத்துடன், உடல் செயற்பாடுகளில் இருந்து வேகமாக மீட்கத் தூண்டுகிறது. கடந்த கோடையில் மான்செஸ்டர் யுனைட்டெட்டில் இருந்து ஓல்டு லேடிக்கு திரும்பியதில் இருந்து போக்பா பல காயங்களுக்குஉள்ளான பின்னடைவைச் சந்தித்து வருகிறார்.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

### விளையாட்டுத் துளிகள்

இலங்கை அணியின் வேகப் பந்துவீச்சாளர் விஷ்வ பெர்னாண்டோ இங்கிலாந்தில் நடைபெறவுள்ள கௌண்டி சம்பியன்ஷிப் தொடருக்கான டர்ஹாம் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். டர்ஹாம் அணியின் கடைசி 2 போட்டிகளில் விஷ்வ பெர்னாண்டோ விளையாடவுள்ளதுடன், வொர்செஸ்டர்ஷயர் அணிக்கு எதிராக 19ஆம் திகதி நடைபெறவுள்ள போட்டிக்கான அணித்தெரிவில் இவர் இடம்பெறுவார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

★★★★

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3 ஆவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி 111 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 338 ஓட்டங்களைக் குவித்தது. பின்னர் ஆடிய அவுஸ்திரேலிய அணி 34.3 ஓவர்களில் 227 ஓட்டங்களுக்கு சுருண்டு தோல்வியுற்றது.

★★★★

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் வரலாற்றில் ஒருநாள் போட்டியில் முதல் முறையாக ஸ்பின்னர்கள் 10 விக்கெட்டுகளைக் கைப்பற்றி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர். இந்தச் சாதனையை இலங்கை அணி படைத்தது. இதற்கு முன்னதாக கடந்த 1997ஆம் ஆண்டு இந்திய அணிக்கு எதிரான போட்டியில் இலங்கை அணியின் ஸ்பின்னர்கள் 9 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தனர்.

# இறுதிப்போட்டியில் இந்தியாவுடன் மோதப்போவது யார்?

## வாழ்வா சாவா ஆட்டத்தில் இலங்கை - பாக். இன்று மோதல்



ஷ. அகில் ஷிஹாப்

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டிக்கு இந்திய அணி தகுதிபெற்றிருக்கும் நிலையில், இந்தியாவுடன் இறுதிப்போட்டியில் மோதப்போவது யார் என்பதைத் தீர்மானிக்கும் வாழ்வா சாவா ஆட்டத்தில் இன்று இலங்கை - பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி இறுதிப்போட்டிக்குத் தெரிவாகும் நிலையில், மாறாக இன்றைய ஆட்டம் மழை காரணமாக முழுமையாகத் தடைப்பட்டால் நெட் ரன்ரேட் அடிப்படையில் முன்னிலை வகிக்கும் இலங்கை அணி நேரடியாக இறுதிப்போட்டிக்குத் தெரிவாகும்.

சுப்பர் 4 சுற்றில் நேற்று முன்தினம் இலங்கை மற்றும் இந்திய அணிகள் மோதியிருந்த போட்டியில் இந்தியா 41 ஓட்டங்களால் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குத் தெரிவானது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. இந்திய அணி இறுதியில் 49.1 ஓவர்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்து 213 ஓட்டங்களைப் பெற்றது.



இலங்கை அணியின் பந்துவீச்சு சார்பில் துனித் வெல்லாலகே 40 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை சாய்க்க, சரித் அசலன்க 18 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை சுருட்டினார். பின்னர் போட்டியின் வெற்றி இலக்கான 214 ஓட்டங்களை அடைய பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி தொடர்ச்சியாக விக்கெட்டுகளை பறிகொடுத்ததோடு 41.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 171 ஓட்டங்களை மாத்திரமே எடுத்து போட்டியில் தோல்வியடைந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை அணிக்காக சகலதுறைகளிலும் பிரகாசித்த துனித் வெல்லாலகே தெரிவாகினார்.

# சச்சினின் சாதனையை முறியடித்த ரோஹித்



இலங்கை அணியுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் ரோஹிட் சர்மா முதல் ஓவரில் 1 பவுண்டரி உட்பட 5 ஓட்டங்களை எடுத்தார். தொடர்ந்து விளையாடிய அவர் 22 ஓட்டங்களை எடுத்தபோது ஒருநாள் கிரிக்கெட்டில் 10 ஆயிரம் குவித்த வீரர் என்ற சாதனையை அவர் படைத்தார். மேலும் குறைந்த போட்டியில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் குவித்த சச்சினின் சாதனையை அவர் முறியடித்தார்.

ரோஹிட் 241 போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார். சச்சின் 259 போட்டிகளில் இதனைக் கடந்தார். இந்தப் பட்டியலில் முதலிடத்தில் விராட் கோஹ்லி உள்ளார். இவர் 205 போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார். இந்திய வீரர்களில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த 6ஆவது வீரராக ரோஹிட் உள்ளார். முதல் 5 இடங்களில் சச்சின் டெண்டுல்கர், விராட் கோஹ்லி, கங்குலி, டிராவிட், டோனி ஆகியோர் உள்ளனர்.

# வடமாகாண விளையாட்டு விழாவில் மன்னார் வலயம் மீண்டும் முதலிடம்




வடமாகாண ரீதியாக உள்ள கல்வி வலயங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவில் அதிக புள்ளிகளைப் பெற்று மன்னார் கல்வி வலயம் மாகாண ரீதியாக முதலாம் இடத்தைப் பெற்று சாதித்துள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான பாடசாலை மட்ட மாகாண விளையாட்டு விழா நிகழ்வானது யாழ்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வரை 5 நாட்களாக நடைபெற்றது.

இதில் மன்னார் கல்வி வலயம் மொத்தமாக 720 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

அதேநேரம், மன்னார் மடு வலயமும் இம்முறை பல சாதனைகளை நிகழ்த்தி 5 ஆவது இடத்தைத் தக்கவைத்துள்ளது. மாகாண ரீதியாக தொடர்சியாக மன்னார் மாவட்டம் பல சாதனைகளை நிகழ்த்தி வருகின்ற நிலையில், தேசிய ரீதியில் இம்முறை மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பல வீரர்கள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிய உலக சாதனை படைத்த இலங்கை அணி



ஆசிய கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இந்திய அணியின் அனைத்து விக்கெட்டுகளையும் கைப்பற்றிய இலங்கை அணி புதிய உலக சாதனையை முதல் அணியாகப் படைத்தது.

சுப்பர்-4 சுற்றின் 4ஆவது ஆட்டத்தில் நேற்று முன்தினம் இந்தியாவும், நடப்பு சம்பியன் இலங்கையும் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் ஆடிய இந்திய அணி 49.1 ஓவர்களில் 213 ஓட்டங்களுக்கு ஆல்-அவுட் ஆனது. இலங்கை தரப்பில் துனித் வெல்லாலகே 5 விக்கெட், சரித் அசலங்க 4 விக்கெட், மகேஷ் தீக்சன 1 விக்கெட் வீழ்த்தினர்.

இந்த ஆட்டத்தில் இந்திய அணியை ஆல் அவுட் செய்ததன் மூலம் இலங்கை அணி ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் புதிய சாதனை ஒன்றைப் படைத்தது. அதாவது, எதிரணியை தொடர்ச்சியாக 14 முறை ஆல் அவுட் செய்த அணி என்ற சாதனையை இலங்கை படைத்தது.

# மூன்றாவது தடவையாக சிறந்த வீரரான பாபர்



ஐ.சி.சியின் ஒகஸ்ட் மாதத்திற்கான சிறந்த கிரிக்கெட் வீரராக பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அசாம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஒகஸ்ட் மாதத்திற்கான சிறந்த வீரர்களுக்கான போட்டியில் பாகிஸ்தான் அணியின் பாபர் அசாம், சதாப் கான் ஆகியோருடன் மேற்கிந்திய தீவுகளின் நிக்கோலஸ் பூரன் ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டிருந்தனர். குறித்த இந்தப் போட்டியில் பாபர் அசாம் ஒகஸ்ட் மாதத்திற்கான சிறந்த வீரராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். பாபர் அசாம் மூன்றாவது தடவையாக ஒகஸ்ட் மாதத்திற்கான சிறந்த வீரர் விருதை தனதாக்கிக்கொண்டுள்ளமை இங்கு விஷேட அம்சமாகும்.



சவளக்கடை செல்வா விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஒலுவில் இலவன் ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது. இறுதிப் போட்டி அண்மையில் சவளக்கடை செல்வா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. **படப்பிடிப்பு:** *றியாஸ் இஸ்மாயில்*

# இலங்கை ரிச்சஸ் லங்கா கிரிக்கெட் மத்திய நிலைய பரிசளிப்பு விழா



கண்டி நிருபர்

இலங்கை ரிச்சஸ் லங்கா கிரிக்கெட் மத்திய நிலைய அக்கடமி ஒழுங்கு செய்த ரி 20 கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் அண்மையில் கண்டி ஜின்னா வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

சென்னை எஸ்.எஸ்.டி. கிரிக்கெட் அக்கடமியுடன் போட்டியிட்டு, இலங்கை ரிச்சஸ் லங்கா மத்திய நிலைய அக்கடமி வெற்றி பெற்றது.

இப்போட்டியில் சிறந்த பந்து வீச்சாளராக அப்துல் ஹனான் தெரிவானதுடன், சிறந்த துடுப்பாட்ட வீரராக சபீக் அஹமட் தெரிவானார்.

இவர்களுடன் மற்றும் பலர் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இவ்வைபவத்தில் முன்னாள் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கா, புரவலர் ஹாசிம் ஓமர், கிரிக்கெட் வீரர் முரளிதரனின் தந்தை சேவாஜோதி எஸ். முத்தையா, தினகரன் ஆசிரியர் செந்தில் வேலவர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





கல்முனை அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலயத்தின் வருடாந்த பிரமோற்சவம் கடந்த 02 ஆம் திகதி சிவாச்சாரியார் சிவஸ்ரீ க.கு.சச்சிதானந்தசிவம் குருக்கள் தலைமையில் ஆரம்பமானது. இதற்கிணங்க வருடாந்த தேர்த் திருவிழா நேற்று(13) இடம்பெற்றது. எம்பெருமான் கல்முனை நகர் வழியாக வீதி உலா வருவதையும் கலந்துகொண்ட பக்தர்களையும் காணலாம். (படங்கள்:பாறுக் ஷிஹான்,பெரியநீலாவணை செய்தியாளர்)

# பதிவு செய்யப்படாத தனியார் கல்வி நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை

## கல்முனை மாநகர சபை அறிவிப்பு



*சாய்ந்தமருது செய்தியாளர்*

கல்முனை மாநகர சபை எல்லையினுள் இயங்கி வருகின்ற அனைத்து தனியார் கல்வி நிலையங்களும் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னதாக மாநகர சபையில் பதிவுசெய்யப்பட வேண்டும். இல்லையேல், சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள விஷேட அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

கல்முனை மாநகர சபை எல்லையினுள் இயங்கி வருகின்ற பல தனியார் கல்வி நிலையங்கள் மாநகர சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும், இன்னும் பல தனியார் கல்வி நிலையங்கள் பதிவு செய்யப்படாமல் இயங்கி வருவது கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறான நிறுவனங்கள் மாநகர சபையில் பதிவுசெய்யாமல் இயங்குவதானது சட்டவிரோத செயற்பாடாகும்.

மேலும், போதைப்பொருள் பாவனையிலிருந்தும் கலாசார சீர்கேடுகளிலிருந்தும் மாணவர்களைப் பாதுகாத்து, நெறிப்படுத்தும் பொருட்டு ஜம்மியத்துல் உலமா சபை உள்ளிட்ட பொது அமைப்புகளின் வேண்டுகோளின் பேரில் பொருத்தமற்ற நேரங்களில் பிரத்தியேக வகுப்புகள் நடத்தப்படுவதைக் கட்டுப்படுத்தும் பொருட்டு தனியார் கல்வி நிலையங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் எமது மாநகர சபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், பதிவு செய்யப்படாத தனியார் கல்வி நிலையங்களினால் இந்நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படுத்தப்படுவதையும் அவதானிக்க முடிகிறது.

ஆகையினால், அனைத்து தனியார் கல்வி நிலையங்களையும் ஒரே குடையின் கீழ் கொண்டுவந்து, அவற்றைக் கட்டுக்கோப்புடன் முறையாக ஒழுங்குபடுத்துவதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

எனவே, இதுவரை பதிவு செய்யப்படாத தனியார் கல்வி நிலையங்கள் அனைத்தும் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னதாக மாநகர சபையில் பதிவு செய்யப்பட வேண்டும்.

குறித்த காலப்பகுதியினுள் பதிவு செய்யப்படாத தனியார் கல்வி நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் நடத்துநர்கள் மீது மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் அவற்றை மூடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், வீடுகளில் தனிப்பட்ட முறையில் ஆசிரியர்களினால் நடத்தப்படும் ஆரம்பக் கல்வி மற்றும் புலமைப் பரிசில் பரீட்சைக்கான மேலதிக வகுப்புகளுக்கும் இவ்வறிவுறுத்தல் பொருத்தமானது என்பதைக் கருத்திற்கொண்டு, அவற்றையும் கல்வி நிலையங்களாகப் பதிவு செய்துகொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## கல்முனை வைத்தியசாலை அபிவிருத்திக் குழுக் கூட்டம்



*பாண்டிருப்பு நிருபர்*

கல்முனை ஆதாரவைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுக் கூட்டம் வைத்தியசாலையின் அபிவிருத் திக் குழு பிரதித் தலைவர் இ.இரா சரெட்ணம் தலைமையில் நடை பெற்றது.

இக்கூட்டத்தில் வைத்தியசாலைப் பணிப்பாளர் ஆர்.முரளீஸ்வரன், நிர்வாக உத்தியோகத்தர் தேவ அருள் உட்பட அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் தொடர்பில் இதன் போது கலந்துரையாடப்பட்டு அதற்கான தீர்வுகளும் முன்வைக்கப் பட்டன.

இக்கூட்டத்தில் வைத்தியசாலை அபிவிருத்திக்குழுத் தலைவராக எம்.சோமசேகரம் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பூச்சிக்கூடு வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

*துறைநீலாவணை நிருபர்*

வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பூச்சிக்கூடு கிராம பிரதான வீதி மூங்கிலாற்றின் அரிப்பு காரணமாக முழுமையாகப் பாதிப்புக்குள்ளாகி போக்குவரத்துச் செய்ய முடியாதுள்ளதாக பொதுமக்கள் சுட்டிக்காட் டுகின்றனர்.

இவ்வீதியின் அவலநிலை குறித்து அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் ஆகியோருக்கு பலமுறை எடுத்துக் கூறியும் குறித்த வீதியைப் புனரமைப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எவரும் இதுவரை முன்னெடுக்கவில்லை என பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பருவமழை ஆரம்பித்துள்ள நிலையில், குறித்த வீதி மண்ணரிப்புக்குட்பட்டு நாளுக்கு நாள் பாதிப்படைந்து வருகின்றது.

பூச்சிக்கூட்டு கிராமமானது மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களை எல்லைப்படுத்துகின்ற தனி தமிழ்க் கிராமம். கடந்த கால போர்ச் சூழலின்போது பெருமளவான அழிவுகளை எதிர்கொண்ட கிராமம். இக்கிராமமானது யானைகள் செறிந்து வாழ்கின்ற



பிரதேசமாகக் காணப்படுகின்றமையால் தினமும் யானைகளின் அட்டகாசத்துக்கும் இக்கிராம மக்கள் ஆளாகி வருகின்றனர்.

எனவே, பூச்சிக்கூட்டுக் கிராம மக்களினதும் விவசாயிகளினதும் நலனைக் கருத்திற்கொண்டு மேற்படி வீதியை புனரமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சுருக்குவலை அனுமதியை இரத்துச்செய்யுமாறு கோரி திருகோணமலையில் வீதி மறியல் போராட்டம்

*அப்துல்சலாம் யாசீம்*

திருகோணமலை மாவட்டத்தில் 176 மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுருக்கு வலை அனுமதியை இரத்துச் செய்யுமாறு கோரி நேற்று (13) திருகோணமலையில் வீதிமறியல் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை சிறிமாபுர சந்தியில் ஆரம்பமான ஆர்ப்பாட்டப்பேரணி திருக்கடலூர் - ஏகாம்பரம் வீதியூடாக திருகோணமலை- கண்டி பிரதான வீதியிலுள்ள மாவட்ட கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தை வந்தடைந்தது. இந்நிலையில், மாவட்ட கடற்றொழில் நீரியல்வள திணைக்கள பிரதான வீதியை மறித்த போராட்டக்காரர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். கடல் வளம் அழிந்து போவதாகவும், மீனவர்கள் தொழில் வாய்ப்பை இழந்து வருவதாகவும், அரச அதிகாரிகள் குறித்த விடயம் தொடர்பில் தெரிந்திருந்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

காலை முதல் மதியம் 12 மணி வரை இடம்பெற்ற இப்போராட்ட இடத்துக்கு கிழக்கு பிராந்தியத்துக்குப் பொறுப்பான கடற்படை உயரதிகாரி மற்றும் திருகோணமலை மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் சென்று எதிர்காலத்தில் மீனவர்களுடன் இணைந்து சட்டவிரோத செயற்பாடுகளைத் தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுப்போம் எனக் கூறியதையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

இப்போராட்டத்தில் சுமார் 500க்கும் மேற்பட்ட மீனவர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.







கல்முனை, துரைவந்தியமேடு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவத்தையொட்டிய பாற்குட பவனி நேற்று (13) ஆலய பிரதம குரு சிவஸ்ரீ த.நல்லராசா குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.

**படங்கள்:** எருவில் செய்தியாளர்

## அம்பாறையில் முதலிடம் பெற்ற மாணவனுக்கு கௌரவம்



*சுலைமான் றாபி*

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானத்துறையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று அம்பாறை மாவட்டத்தில் முதலிடம் பெற்ற நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை மாணவன் வை.எம். ஹிசாமை சிறகுகள் பௌண்டேஷன் அமைப்பு நேற்று முன்தினம் (12) வீடுதேடிச் சென்று பாராட்டி கௌர வித்தது.

அண்மையில் வெளியாகிய க.பொ.த. (உ/த) பரீட்சை முடிவுகளின் படி, பௌதீக விஞ்ஞான பீடத்தில் அம்பாறை மாவட்டத்தில் அல் - அஷ்ரக் தேசிய பாடசாலை மாணவன் வை.எம். ஹிசாம் முதலிடத்தைப் பெற்றிருந்தார்.

சிறகுகள் பவுண்டேஷன் அமைப்பின் தலைவர் ஹனிபா முஸம்மில் தலைமையில் கல்முனை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.ஏ.சாஜித், நிந்தவூர் கோட்டக் கல்வி அதிகாரி எம்.சரிப்டீன், பாடசாலையின் அதிபர் ஏ.அப்துல் கபூர், பிரதி அதிபர்களான ஏ.எம்.எம். அஸ்லம், எச்.எம்.எம். அனீஸ், பகுதித் தலைவர்களான ஏ.நௌஷாட், ஏ. இப்திகார், சிறகுகள் பவுண்டேஷன் அமைப்பின் இணைப்பாளர் ஏ.றம்சான் உள்ளிட்டோரே மேற்குறித்த மாணவனின் வீட்டுக்குச் சென்று அவரைப் பாராட்டிக் கௌரவித்தனர்.

இதேவேளை, நிந்தவூரிலிருந்து பொறியியல் பீடத்துக்கு இம்முறை 09 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இன்று 75 ஆவது அகவையை காணும் மூத்த பத்திரிகையாளர் சலீம்



அரை நூற்றாண்டுக்கும் அதிக காலமாக பிராந்திய செய்தியாளர்களாகப் பணியாற்றிவருபவர்கள் என்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன்று ஒருசிலரே இருக்கிறார்கள்.

கிழக்கு மாகாணத்தில் அதுவும் குறிப்பாக, அம்பாறை மாவட்டத்தில் அத்தகைய நீண்டகால அனுபவமுடைய பத்திரிகையாளராக ஏ.எல்.எம்.சலீமைக் குறிப்பிட முடியும்.

தொடர்ந்தும் துடிப்புடன் பணியாற்றி வரும் அவர், இன்று 75 ஆவது அகவையில் பிரவேசிக்கிறார். அவரை ஆரோக்கியத்துடன் நீடூழி வாழவும் ஊடகத்துறைக்கு மேலும் பயனுறுதியுடைய பங்களிப்பைச் செய்யவும் வாழ்த்துவோம்.

நிந்தவூரைச் சேர்ந்த சலீம் 1966 ஆம் ஆண்டு வீரகேசரியின் செய்தியாளராக பத்திரிகைத்துறையில் பிரவேசம் செய்தார். பிறகு சுதந்திரன், தினகரன், தினபதி, சிந்தாமணி, தினக்குரல் என்று பல பத்திரிகைகளின் பிராந்திய செய்தியாளராகப் பணியாற்றி தனது சேவையை விரிவுபடுத்தினார். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன்' தினசரியின் அம்பாறை மாவட்ட செய்தியாளராக அதன் தொடக்ககாலத்திலிருந்தே சலீம் பணியாற்றிவருகிறார். இதனிடையே, அவரின் பணியின் தரம் கண்டு சில இலத்திரனியல் ஊடகங்களும் கூட அவரது சேவையை நாடின.

இலங்கையின் தமிழ்ப் பத்திரிகைத் துறையில் வளமான ஒரு மரபை விட்டுச்சென்ற புகழ்பூத்த பத்திரிகை ஆசிரியர்களான அமரர்கள் எஸ்.டி. சிவநாயகம், ஆர்.சிவகுருநாதன், கே.சிவப்பிரகாசம், ஆ.சிவனேசச்செல்வன், எஸ். நடராசா, கே.கே. இரத்தினசிங்கம், கானமயில்நாதன் ஆகியோரின் காலத்தில் அவர்களின் வழிநடத்தலில் பணியாற்றிய சலீம் இன்றைய இளம் பத்திரிகை ஆசிரியர்களின் காலத்திலும் பிராந்திய செய்தியாளராகத் தொடருகிறார்.

தகவல் தொழில்நுட்பத்தின் அபார வளர்ச்சி காரணமாக பத்திரிகையாளர்களின் செயற்பாட்டு முறைகளில் நவீன கருவிகளைப் பயன்படுத்தி கடைப்பிடிக்க வேண்டியிருக்கும் மாற்றங்களுக்கு தன்னை இசைவாக்கிக் கொண்டு தங்கள் பணியை தொடர்ந்தும் செய்துவரும் தமிழ்பேசும் பத்திரிகையாளர்களுள் சலீமும் ஒருவர் எனலாம்.

வெறுமனே பிராந்திய செய்திகளை மாத்திரம் அனுப்பும் ஒரு செய்தியாளராக மாத்திரமல்ல, அரசியல், சமூகப் பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்த பெருவாரியான கட்டுரைகளையும் சலீம் எழுதிவந்திருக்கிறார். பத்திரிகையாளர்களுக்கு இருக்கவேண்டிய சமூகப் பிரக்ஞையின் பால் மிகுந்த சிரத்தை காட்டி தனது பணிகளை சலீம் முன்னெடுத்து வந்திருக்கிறார்.

பிரதானமாக அம்பாறை மாவட்டத்தை தனது களமாகக் கொண்டு செயற்பட்டு வந்த போதிலும் ஊடகவியலாளர்களின் உரிமைகள் மற்றும் நலன்களுக்காக குரல்கொடுக்கும் பல்வேறு அமைப்புகளில் முக்கிய பங்கை வகித்த காரணத்தால் கிழக்கு மாகாணத்துக்கு அப்பால் வடமாகாணம், மலையகம் மற்றும் தலைநகர் கொழும்பு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் தமிழ்பேசும் ஊடகவியலாளர்கள் மத்தியில் மிகுந்த நட்புரிமை கொண்டவராக சலீம் விளங்குகிறார்.

முஸ்லிம் மீடியா போரம், இலங்கை தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் ஆகியவற்றின் ஸ்தாபக உறுப்பினரான சலீம், கிழக்கிலங்கை செய்தியாளர்கள் சங்கம், அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் சம்மேளனம், தென்கிழக்கிலங்கை செய்தியாளர்கள் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும் இருந்தார். 15 வருடங்களாக நிந்தவூர் மத்தியஸ்த சபையின் உறுப்பினராக இருந்துவரும் அவர், தற்போது நிந்தவூர் கலை இலக்கியப் பேரவையின் உப தலைவராகச் செயற்படுகின்றார்.

சலீமின் பத்திரிகைத்துறை சேவைக்காக அவர் பல்வேறு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருக்கிறார். கலாபூஷணம் விருது (2008), இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து வருடாந்தம் வழங்கும் வாழ்நாள் சாதனையாளர் விருது (2017), கல்முனை மாநகர சபையின் ஊடக முதுசம் பட்டம் என்பவை அவருக்கு கிடைத்த மிகவும் குறிப்பிடத்தக்க விருதுகள்.

பத்திரிகைத்துறையில் சலீம் 50 வருடங்களைப் பூர்த்திசெய்ததை முன்னிட்டு சில வருடங்களுக்கு முன்னர் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் சம்மேளனம் விமரிசையாகப் பெருவிழா எடுத்து அவரைக் கௌரவித்ததுடன் பொன்விழாக்காணும் சலீம் என்ற சிறப்பு மலரையும் வெளியிட்டது. அந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றி அவரைக் கௌரவப்படுத்தும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

அந்த விழாவில் தமிழ்,முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பலரும் நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த ஊடகவியலாளர்களும் சமூகப் பிரமுகர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். அது தனது பத்திரிகைத்துறை வாழ்வில் சலீம் செய்த பெறுமதியான பங்களிப்புகளுக்காக சமூகம் அவர் மீது கொண்டிருந்த அபிமானத்தின் சான்றாக அமைந்தது.

சலீம் போன்ற மிகவும் நீண்டகால பிராந்திய செய்தியாளர்களின் அனுபவங்கள் இன்றைய இளம் தலைமுறை ஊடகவியலாளர்களுக்கு முன்னுதாரணமாக அமையக்கூடியவை. இன்னும் மூன்று வருடங்களில் சலீமின் பத்திரிகைத்துறை வாழ்வு ஆறு தசாப்தங்களைப் பூர்த்திசெய்யும். இந்த நீண்டகால அனுபவங்களை அவர் எழுதி நூல் வடிவில் கொண்டுவரவேண்டும். இது அவரது 75 ஆவது பிறந்த தினத்தில் நான் முன்வைக்கும் கோரிக்கையாகும்.

வடபகுதியில் இன்று இருக்கக்கூடிய மிகவும் மூத்த பிராந்திய பத்திரிகையாளரான வடமராட்சி புலோலி சி. தில்லைநாதனின் 73 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு கடந்த ஜூனில் இதே கோரிக்கையை நான் முன்வைத்தேன்.

இலங்கையில் தமிழ்ப் பத்திரிகையாளர்களிடம் பெரும்பாலும் காணப்படும் ஒரு முக்கியமான குறைபாடு அவர்கள் தங்களது சேவைக்கால அனுபவங்களின் ஊடாக ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் அரசியல்,சமூக நிகழ்வுப்போக்குகளை வரலாற்றுப் பதிவாக எழுதுவதில் அக்கறை காட்டுவதில்லை என்பதாகும். எமது நண்பர் அமரர் வவுனியா மாணிக்கவாசகம் இதில் விதிவிலக்காக நடந்துகொண்ட மூத்த பத்திரிகையாளர்களுக்கு அண்மைய உதாரணமாகும்.

'இன்றைய செய்தி நாளைய வரலாற்றின் அரை குறையான முதல் வரைவு' - என்று சொல்வார்கள். அதனால் தான் மூத்த ஊடகவியலாளர்களைப் பற்றி எழுதக்கிடைக்கும் சந்தர்ப்பங்களில் இந்தக் கோரிக்கையை முன்வைப்பதற்கு நான் தவறுவதில்லை.

### இறுதியாக ஒரு தனிப்பட்ட குறிப்பு

எனக்கும் சலீமுக்குமிடையிலான நட்பு கால் நூற்றாண்டுக்கும் அதிகமான நீட்சி கொண்டதாகும். கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் தினக்குரல் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டபோது அதன் முதல் செய்தி ஆசிரியர் என்ற வகையில் நான் கிழக்கு மாகாணத்தின் பிரதேசங்களுக்கு செய்தியாளர்களைத் தேடிக்கொண்டிருந்தபோது எனக்கு அறிமுகப்படுத்தப்பட்டவர்களுள் திருகோணமலையின் மூத்த பத்திரிகையாளர் சின்னையா குருநாதனும் அம்பாறை மாவட்டத்தின் சலீமும் மட்டக்களப்பின் சண். தவராசாவும் முக்கியமானவர்கள்.

அவர்கள் தினக்குரலின் பிராந்தியச் செய்தியாளர்களாகப் பணியாற்ற முன்வந்ததுடன் மாத்திரம் நின்றுவிடவில்லை, பல்வேறு பகுதிகளில் செய்தியாளர்களாக நியமிக்கப்படக்கூடியவர்களுடன் எனக்கு தொடர்புகளை ஏற்படுத்தியும் தந்தார்கள். அவர்களது உதவிகள் விரிவான பிராந்தியச் செய்தி யாளர்கள் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி புதிய பத்திரிகையை குறுகிய காலத்துக்குள் பரந்தளவு வாசகர்கள் மத்தியில் கொண்டுசெல்ல எமக்கு உதவியது.

அது விடயத்தில் சலீமின் பங்களிப்பு என்றென்றைக்கும் மறக்க முடியாதது. முதலில் அவர் முழு அம்பாறை மாவட்டத்துக்குமான தினக்குரல் செய்தியாளராக இருந்துகொண்டு பின்னர் அந்த மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் செய்தியாளர்களைத் தேடித்தந்தார். தினக்குரலின் ஆரம்ப கட்ட வளர்ச்சியில் ஒரு பிராந்திய செய்தியாளர் என்ற வகையில் சலீமின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

நண்பர் சலீமுக்கு மீண்டும் பிறந்தநாள் வாழ்த்துகளைக் கூறிக்கொண்டு அவரது பத்திரிகைத்துறைப் பணி தொடர வேண்டுகிறேன். மூத்த பத்திரிகையாளர்களை வாழும்போதே வாழ்த்துவோம்.

**வீரகத்தி தனபாலசிங்கம்**

ஈஸ்டர் தின குண்டுத் தாக்குதல் விவகாரம்

# சர்வதேச விசாரணையை கோருவதற்கு முஸ்லிம் பிரதிநிதிகள் முன்வரவேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தியின் திகாமடுல்ல மாவட்ட அமைப்பாளர் புகாரி

அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவத்தினால் இலங்கை முஸ்லிம்கள் அவமானங்களையும் பல்வேறு துன்பங்களையும் சந்தித்தனர். இது இவ்வாறிருக்க, தற்போது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களையும் மேற்படி சம்பவத்துடன் தொடர்புபடுத்துவதற்கான சூழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டு வருகின்றன. இந்நிலையில், இதனை முறியடிப்பதற்காக சர்வதேச விசாரணையை கோருவதற்கு முஸ்லிம் பிரதிநிதிகள் முன்வரவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் திகாமடுல்ல மாவட்ட அமைப்பாளர் எம்.ஐ.ஏ.ஆர்.புகாரி தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த "இளைஞர்களின் எதிர்காலம்" எனும் தொனிப்பொருளிலான விசேட கூட்டம் நேற்று முன்தினம் (12) இரவு அக்கரைப்பற்றில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவத்தையடுத்து சகோதர இன மக்கள் முஸ்லிம்கள் மீது கொண்டுள்ள சந்தேகப்பார்வை இன்னும் தீரவில்லை. இந்த சந்தேகப்பார்வையுடன் முஸ்லிம் சமூகம் தொடர்ந்தும் இந்த நாட்டில் வாழ முடியாது. எனவே இந்த விடயத்தில் முஸ்லிம்கள் நிரபராதி என்பதை நிரூபிக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். அதற்கு ஒரே வழி சர்வதேச விசாரணையாகும்.

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதல் சம்பவத்தினால் இலங்கை முஸ்லிம்கள் அவமானங்களையும் பல்வேறு துன்பங்களையும் சந்தித்தனர். இது இவ்வாறிருக்க, தற்போது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களையும் மேற்படி சம்பவத்துடன் தொடர்புபடுத்துவதற்கான சூழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இதனை முறியடிப்பதற்காக சர்வதேச விசாரணையை கோருவதற்கு முஸ்லிம் பிரதிநிதிகள் அனைவரும் கட்சிபேதமின்றி முன்வரவேண்டும்.

இதற்காக முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்படி விடயம் தொடர்பாக கோரிக்கை கடிதமொன்றில் கையொப்பமிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்க வேண்டும்.

இதற்கு கையொப்பமிட மறுக்கும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை அடையாளங் கண்டு அவர்கள் முஸ்லிம் சமூகத்தோடு பயணிக்கவில்லை என்பதையும் சமூகத்துக்கு எடுத்துக் காட்டலாம் எனவும் தெரிவித்தார்.

# சமூர்த்தி குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

திராய்க்கேணி நிருபர்

சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு 'சிசுபல சமாஜ சத்காரய' வேலைத்திட்டத்தின் கீழ் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கிணங்க அக்கரைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்ஸார் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்றாஸ், விசேட அதிதியாக அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமது ஷாபிர் ஆகியோர் கலந்து கொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கினர். இந்நிகழ்வில் பெற்றோரும் கலந்து கொண்டனர்.





# சம்மாந்துறையில் வாய்க்கால் துப்புரவு





கோணாவத்தை செய்தியாளர்

சம்மாந்துறை எஸ் 22ஆம் வாய்க்கால் நேற்று முன்தினம் (12) துப்புரவு செய்யப்பட்டது.

சம்மாந்துறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலயத்துக்குட்பட்ட மேற்படி வாய்க்கால் குப்பைக்கூளங்கள் நிறைந்து காடுமண்டி வளர்ந்து நீரோட்டத்துக்கு தடையாக காணப்பட்டது. இந்நிலையில் சம்மாந்துறை ஹிலால் ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் குறித்த வாய்க்காலை துப்புரவு செய்து தருமாறு நீர்ப்பாசன பிரதேச பொறியியலாளர் எம்.எஸ்.எம்.நவாஸிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். இந்நிலையில் மேற்படி கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அவர், வாய்க்காலை சுத்தம் செய்யும் சிரமதானப் பணியை முன்னெடுத்தார்.

சம்மாந்துறை புளக் ஜே பிரிவின் திட்ட முகாமையாளர் ஏ.எல்.ஏ.சாபிரின் மேற்பார்வையில் இடம்பெற்ற இச்சிரமதான நிகழ்வில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய சுற்றுச்சூழல் பொறுப்பதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சமன்ஸ் விவசாய அமைப்பின் உறுப்பினர்கள், பள்ளிவாசல் நிர்வாகத்தினர், நீர்ப்பாசன திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள், பராமரிப்பு ஊழியர்கள், பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.எம்.எம்.முஸ்தபா மற்றும் பிரதேச மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



யாழில் போதைப்பொருட்கள் பாவனையை தடுக்க உணர்வு ரீதியிலான திட்டம் அவசியமாம் எண்டு வீணக்கட்சி மந்திரியார் டக்லஷ் தோழர் சொல்லிப்போட்டாரு எலுவா..?

அவரே உணர்வு இல்லாத மரக்கட்டை உணர்வு இருந்தா முந்தி காட்டிக்கொடுத்திரிப்பாரா.... ரோசம், மானம், வெட்கம், சூடு, சுறண ஒன்றுமில்லாதவங்க எல்லாம் இப்ப உணர்வப்பற்றி கத சொல்லுறாங்க... அவங்க கதைக்கிற காலம் நாம கேட்கிற காலம்டாப்பா...!

# பல்துறை பணியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதன் ஊடாக யானை - மனித மோதல்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கலாம்

## வனஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி

வனஜீவராசிகள் திணைக்களத்தில் காணப்படும் பல்துறை பணியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதன் ஊடாக யானை - மனித மோதல்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும் என வனஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா தேவி வன்னியாரச்சி தெரிவித்தார்.

வனஜீவராசிகள் திணைக்களத்துடன் இணைந்து தற்பொழுது சேவையாற்றும் பல்துறை பணியாளர்களை நிரந்தர ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் இதற்கான அனுமதி கிடைத்ததும் யானைகளால் ஏற்படும் தாக்கத்தைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபடுத்த முடியும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற வனஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனைக் கூட்டத்தில் யானை - மனித மோதல்களைத் தடுப்பது குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த விடயங்களுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் பவித்ரா தேவி வன்னியாரச்சி மேற்கண்டவாறு தெரிவித்தார்.



யானை - மனித மோதல்களைத் தடுப்பதற்கு ஏற்கனவே பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சிவில் பாதுகாப்புத் திணைக்கள உறுப்பினர்களின் சேவையைத் தொடர்ந்து பெற்றுக்கொள்ளும் அதேநேரம், பல்துறை பணியாளர்களை இணைத்துக் கொண்டால் பகல் மற்றும் இரவு நேரங்களில் யானைகள் கிராமங்களுக்குள் அத்துமீறி நுழைவதைத் தடுப்பதற்கான கண்காணிப்புகளை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தனியார் காணிகள் உள்ளிட்ட இடங்களில் வளர்க்கப்பட்டுள்ள பைனஸ் மரங்களை வெட்டுவதில் காணப்படும் தடைகள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். தனியார் காணிகளில் உள்ள பைனஸ் மரங்களை வெட்டுவது குறித்த வர்த்தமானி அறிவித்தலில் திருத்தம் செய்வது குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் வனங்களை எல்லையிடும் நடவடிக்கையினால் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகளில் பரம்பரையாக விவசாயத்தில் ஈடுபட்டு வந்தவர்கள் பாதிக்கப்படுவதாக உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# புத்தளத்தில் நடமாடும் சேவை



ரஸீன் ரஸ்மின்

உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சும் பதிவாளர் நாயகம் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த விசேட நடமாடும் சேவை நேற்று புத்தளம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பியந்த, புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிந்தக்க அமல் மாயாதுன்ன, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் ஆனந்த வன்னிநாயக்க, பதிவாளர் நாயகம் சமந்த விஜேசிங்க, புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத், புத்தளம் பிரதேச செயலகத்தின் பதில் பிரதேச செயலாளர் சம்பத் வீரசேகர உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது புத்தளத்தில் பிறப்பு, இறப்பு மற்றும் திருமணப் பதிவு இல்லாதவர்களுக்கு ஒரே நாளில் பதிவு செய்யும் நடவடிக்கைகள் இங்கு முன்னெடுக்கப்பட்டன.

மேலும், சுமார் 45 வருடங்களுக்கும் மேல் சட்டரீதியாக திருமணப் பதிவு செய்துகொள்ளாமல் வாழ்ந்த வயோதிப குடும்பம் ஒன்றுக்கு இராஜாங்க அமைச்சர் அசோக பியந்த மற்றும் பதிவாளர் நாயகம் சமந்த விஜேசிங்க ஆகிய இருவரும் சாட்சிகளாக ஒப்பமிட்டு திருமணப் பதிவை பெற்றுக்கொடுத்தனர்.

குறித்த நடமாடும் சேவை மூலம் பிறப்பு, இறப்பு மற்றும் திருமண பதிவு சான்றிதழ் இல்லாத 300 பேருக்கு மேற்படி சேவைகள் ஒரே நாளில் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

இதேவேளை, பிறப்புச் சான்றிதழ் இல்லாத 14ஆயிரம் பேருக்கு விசேட வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு நடமாடும் சேவை மூலமாக பிறப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பியந்த இதன்போது தெரிவித்தார்.

# போக வேண்டாமென்றபோதும் மகன் போனார்: ரயிலிலிருந்து விழுந்து உயிரிழந்தவரின் தாய் சாட்சியம்!

"அம்மா, இன்றைக்கு ஸ்டிரைக், அதனால் புகையிரதம் போகாது' என்று என் மகன் என்னிடம் போனில் சொன்னான். 'இன்று செல்ல வேண்டாம் வீட்டுக்கு வா' என்று நான் அப்போது கூறினேன். ஆனால் அவன் அதை கேளாமல் புகையிரதத்தில் சென்றான்'' என புகையிரதத்தின் மேற்கூரையில் பயணித்தபோது புகையிரத நிலையத்தின் கூரையில் மோதி உயிரிழந்த மாணவனின் தாயார் நிரோஷா குணசேகர தெரிவித்தார்.

புகையிரத சாரதிகளின் நியாய மான கோரிக்கையை அரசு கண்டுகொள்ளாததையடுத்து, அவர்கள் நேற்று முன்தினம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதனால் மட்டுப்படுத்தப்பட்ட புகையிரதங்களே இயங்கின. சேவையில் ஈடுபட்ட சில புகையிரதங்களில் பயணிகள் முண்டியடித்துக் கொண்டு பயணித்தனர்.

இதன்போது, புகையிரதத்தின் கூரையில் ஏறி பயணித்த மாணவனின் பிரேத பரிசோதனையின் போது மாணவனின் தாயார் இதனைத் தெரிவித்துள்ளார்.

கட்டுபெத்த தொழில்நுட்ப கல்லூரியில் கல்வி பயின்ற கம்பஹா, மொரகொட பிரதேசத்தைச் சேர்ந்த டொன் டினித் இந்துவர என்ற மாணவனே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

ராகம போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி எஸ்.ஐ.எஸ். திசாநாயக்க முன்னிலையில் நடைபெற்ற சாட்சி விசாரணையில், கலஹிட்டியவ விவசாய சேவை நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் நிரோஷா குணசேகர சாட்சியமளிக்கையில் கூறிய தாவது,







'எனது குடும்பத்தில் மூன்று பெண்களும் ஒரு பையனும் உள்ளனர். தினித் இந்துவர ஒரே ஆண் பிள்ளை. அவருடைய கல்வியில் எனக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. அதான் என் ஒரே பிள்ளையை இந்த தொழிற்பயிற்சி கல்லூரியில் சேர்த்தேன். அந்த பயிற்சி நான்கு ஆண்டுகள். இப்போதுதான் முதல் வருடம் முடிந்துள்ளது. என் மகன் கம்பஹா புகையிரத நிலையத்துக்குச் சென்று, என்னை தொலைபேசியில் அழைத்து புகையிரத வேலை நிறுத்தம் காரணமாக இன்று புகையிரதம் இயங்காது என தெரிவித்தார். நான் அந்த நேரத்தில் சொன்னேன், இன்று போகாதே மகனே, வீட்டுக்கு வா என.

ஆனால், மகன் அதைக் கேட்கவில்லை. முந்தைய நாளும் அவரால் பயிற்சிக்கு செல்ல முடியவில்லை. அதற்கு காரணம், அவர் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக மருத்துவ பரிசோதனைக்கு சென்றிருந்தார். அதனால் இன்று எப்படியும் சென்றுவிடுவேன் என்றார். இந்தப் படிப்பை ஆர்வத்துடன் மேற்கொண்டார். இந்த சம்பவம் தொடர்பில் ஹுணுப்பிட்டிய புகையிரத நிலையம் எமக்கு அறிவித்தது. கூடிய விரைவில் ஹுணுப்பிட்டிய புகையிரத நிலையத்துக்கு வருமாறு அறிவிக்கப்பட்டது' என்றார்.

இங்கு சாட்சியமளித்த உயிரிழந்தவரின் தந்தையான 49 வயதான டபிள்யூ.டி.பிரிய சுகத் பெரேரா,

என் ஒரே மகன் இறந்துவிட்டான். கல்விக்காக கட்டுபெத்த தொழில்நுட்ப கல்லூரிக்கு செல்கிறார். ஒரு வருடமாக கம்பஹாவில் இருந்து தினமும் ரயிலில் செல்கிறார். மகனை தினமும் கம்பஹா ரயில் நிலையத்தில் இறக்கி விடுகிறேன்.

சம்பவத்தன்று நான் கம்பஹா ரயில் நிலையத்தில் இருந்து காலை 6:00 மணியளவில் புறப்பட்டேன். ஆனால் வேலை நிறுத்தம் காரணமாக என் மகன் செல்லும் ரயில் செல்லவில்லை. அந்த நேரத்தில் மகனும் அம்மாவுக்கு தொலைபேசியில் தெரிவித்தார். இன்று போக வேண்டாம், வீட்டுக்கு வருமாறு கூறினார். ஆனால் முதல் நாளும் செல்லவில்லை என்றும் இன்று எப்படியும் போகவேண்டுமென்றும் மகன் கூறினார்.

அதன் பிறகு, கூட்ட நெரிசலில் 6.40 ரயிலில் ஏறினார். எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டுள்ளதாக ஹுணுப்பிட்டிய புகையிரத நிலையம் காலை எனக்கு அறிவித்தது.

மகனின் உடலை எடுக்க வருமாறு கூறினர். அதன் பின்னர் மனைவியுடன் ஹுணுப்பிட்டிய புகையிரத நிலையத்துக்குச் சென்றேன். மகனின் சடலத்தை ராகம வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுவிட்டனர் என்றார்.

இந்த மரணம் தொடர்பில் ராகம வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி என்.எல்.ஏ.ரோஷ்னியின் பிரேதப் பரிசோதனையில், தலையில் பலத்த காயம் காரணமாக மரணம் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

முன்வைக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கையின் பிரகாரம், ரயிலில் இருந்து தவறி விழுந்து தலையில் பலத்த காயம் காரணமாக இந்த மரணம் ஏற்பட்டுள்ளதாக ராகம வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரி தீர்மானித்தார்.

# ரஷ்யாவுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வடகொரியா வழங்கும்

## புட்டின் - கிம் ஜோங் உன் சந்திப்பு: 5 மணிநேர பரஸ்பர பேச்சுவார்த்தை



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் நேற்று (13) நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த இருநாட்டு தலைவர்களின் சந்திப்பு சர்வதேச அரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



பரஸ்பர நல்லுறவுக்காக சுமார் 4 முதல் 5 மணிநேரம் நடைபெற்ற பேச்சுவார்த்தை நிறைவடைந்ததாக அந்நாட்டு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

முன்னர் ரஷ்யாவின் தென்கிழக்கிலுள்ள ரஷ்யாவின் முக்கிய விண்வெளி மையமான வோஸ்டோச்னி கொஸ்மோடிரோம் தளத்தில் வடகொரிய ஜனாதிபதியை வரவேற்ற புட்டின், அங்குள்ள பல முக்கிய அம்சங்களை கிம்முக்கு சுற்றி காண்பித்தார். இதன்பின்னர் தூதுவர்கள் அளவிலான சந்திப்புகள் நடைபெற்றன.

இருவரின் இந்த தனிப்பட்ட சந்திப்புக்கு முன்னர் ரஷ்ய-உக்ரைன் போரை மறைமுகமாக குறிப்பிடும் விதமாக, ''ரஷ்யா தனது பாதுகாப்புக்காக மேற்கொண்டுவரும் புனித போரில், அந்நாட்டுக்கு தேவைப்படும் முழுமையான, நிபந்தனையற்ற ஆதரவை வடகொரியா வழங்கும்'' என கிம் ஜோங் உன் அறிவித்தார்.

அணு ஆயுத சோதனைகளை நடத்தியதன் மூலமும் ஐ.நா. தடையையும் மீறி நீண்ட தொலைவு பாய்ந்து செல்லும் பெலிஸ்டிக் வகை ஏவுகணைகளை உருவாக்கி வருவதாகவும் சர்வதேச அளவில் வடகொரியா நீண்ட காலமாகவே தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஐ.நா. உட்பட மேற்கத்தேய நாடுகளின் எதிர்ப்பையும் மீறி உக்ரைன் மீது படையெடுத்ததன் மூலம் ரஷ்யாவையும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் சர்வதேச அளவில் தனிமைப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளன.

இந்நிலையில், இரு நாடுகளின் ஜனாதிபதிகளான கிம் ஜோங்-உன்னும், விளாடிமிர் புட்டினும் நேரில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



இந்த பேச்சுவார்த்தைக்காக கிம் உன் பயணம் மேற்கொண்ட ரயில், செவ்வாய்க்கிழமை (12) ரஷ்யாவை சென்றடைந்தது. இந்நிலையில், ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் நேற்று புட்டினை சந்தித்து கிம் பேச்சுவார்த்தை நடத்தினார். முக்கியமாக, உக்ரைன் போரில் ரஷ்யா பயன்படுத்துவதற்கான ஆயுதங்களை விற்பனை செய்வதற்கான ஒப்பந்தம் இந்தப் பயணத்தின்போது மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. வடகொரியாவிடமிருந்து எறிகணை குண்டுகள், பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகளைக் கொள்முதல் செய்ய ரஷ்யா விரும்புவதாக தெரிவிக்கப்படுகிறது.



## உலக செய்திகள்



# பேரழிவில் சிக்கித் தவிக்கும் லிபியா: 6,085 பேர் பலி; 10,000 பேர் மாயம்

லிபியாவை தாக்கிய டேனியல் புயல் மற்றும் கடும் மழை, வெள்ளத்தில் சிக்கி 6,085இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், 10,000இற்கும் அதிகமானோர் காணாமல்போயுள்ளனர்.

இதேவேளை, சுமார் 30,000இற்கும் அதிகமானோர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர் என அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன. அங்கு மீட்புப் பணிகள் முழுவீச்சில் இடம்பெற்றுவரும் நிலையில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

மத்தியதரைக்கடல் பகுதியில் அண்மையில் உருவான டேனியல் என்று பெயரிடப்பட்ட புயல் கடந்த 10ஆம் திகதி லிபியாவின் பெங்காசி பகுதியில் கரையைக் கடந்தது. அப்போது மணிக்கு 165 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசியது.

இந்தப் புயலால் கடந்த சில நாட்களாக லிபியாவில் வரலாறு காணாத பலத்த மழை பெய்துவந்த நிலையில், கிழக்கு லிபியா பகுதியில் டெர்னா நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அந்த நதியில் கட்டப்பட்டுள்ள 2 அணைகள் உடைப்பெடுத்துள்ளன. இதன் காரணமாக டெர்னா, பாய்தா, சூசா, ஷாஹத், மார்ஜ் உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கின. வீடுகளும் மக்களின் உடமைகளும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இதில் டெர்னா நகரம் பேரழிவை சந்தித்துள்ளது. இந்நிலையில், லிபியாவில் 3 நாட்கள் துக்கதினம் அறிவிக்கப்பட்டுள்ளது.





இதுகுறித்து கிழக்கு லிபியா நிர்வாகத்தின் மூத்த அதிகாரிகள் தெரிவிக்கையில்,

''புயல், கடும் மழை மற்றும் அணைகள் உடைப்பால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி இதுவரை 6,085இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 10,000இற்கும் மேற்பட்டோரைக் காணவில்லை'' என்று தெரிவித்தனர்.

இந்நிலையில், லிபிய செஞ்சிலுவை சங்கத்தின் செய்தித் தொடர்பாளர் தாமர் தெரிவிக்கையில்,

''வடக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள லிபியாவில் உள்நாட்டுப் போர் நடைபெறுகிறது. இதனால் அந்த நாடு கிழக்கு லிபியா, மேற்கு லிபியா என இரு பகுதிகளாக பிரிந்துள்ளன. உள்நாட்டுப் போரால் லிபியாவில் அடிப்படை கட்டமைப்புகள் மிகவும் மோசமான நிலையிலுள்ளன. இதனால் லிபியாவில் பேரழிவு ஏற்பட்டிருக்கிறது. ஐ.நா. சபை, செஞ்சிலுவை சங்கம் சார்பில் கிழக்கு லிபியாவில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன'' - என்றார்.

# சிங்கப்பூரின் ஜனாதிபதியாக இன்று பதவியேற்கிறார் தர்மன்

சிங்கப்பூரின் 9ஆவது ஜனாதிபதியாக ஈழத்தை பூர்வீகமாகக்கொண்ட தமிழரான தர்மன் சண்முகரத்னம் இன்று (14) பதவியேற்கவுள்ளார்.

சிங்கப்பூரில் கடந்த முதலாம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் ஈழத்தமிழரான தர்மன் சண்முகரத்னம் 70.4 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார்.

இதைத் தொடர்ந்து, சிங்கப்பூரின் 9ஆவது ஜனாதிபதியாக அவர் இன்று பதவியேற்கிறார்.

புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள தர்மன் சண்முகரத்னம் 1957ஆம் ஆண்டு சிங்கப்பூரில் பிறந்தவர். இவரது தந்தை, இலங்கை தமிழரான கனரத்னம் சண்முகரத்னம் சிங்கப்பூரின் பிரபல நோயியல் மருத்துவராக இருந்தவர். மிகச்சிறந்த பொருளாதார வல்லுநரான தர்மன் சண்முகரத்னம், கடந்த 2001ஆம் ஆண்டு தனது அரசியல் பயணத்தை தொடங்கியவர். ஆளும் மக்களின் செயல் கட்சி சார்பில் போட்டியிட்டு எம்.பியானார். அதைத் தொடர்ந்து



20 ஆண்டுகால அரசியல் வாழ்க்கையில், 2011 முதல் 2019 வரை துணை பிரதமராகவும், சிங்கப்பூர் நாணயச் சபையின் தலைவர், பிரதமரின் ஆலோசகர், நிதி அமைச்சர், கல்வி அமைச்சர் என பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக சமீபத்தில் அவர் மக்களின் செயல் கட்சியிலிருந்து விலகினார்.

# மலையக கலாசார சங்கம் நடத்திய நினைவேந்தல் நிகழ்வு









இக்பால் அலி

மலையக கலாசார சங்கம் நடத்திய அமரர்களான 'திவயின' பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் மெரில் பெரேரா, அருள்வாக்கி அப்துல் காதர் புலவர், மகாத்மா காந்தி மற்றும் துரைராஜா துரை மனோகரனின் துணைவியார் ஆகியோரின் நினைவேந்தல் நிகழ்வு கண்டியில் அண்மையில் இடம்பெற்றது.

மலையக கலாசார சங்கத்தின் (இரத்தின தீபம்) தலைவர் ராஜா ஜேகின்ஸ் தலைமையில் கண்டி, கெப்பட்டிப்பொல கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சிங்கள வர்த்தக சங்கத்தின் தலைவர் யசஸ் சந்திர சேகர கலந்துகொண்டார்.

இவ்வைபவத்தில் பேராசிரியர் துரைமனோகரன், கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் முன்னாள் செயலாளர் எஸ்.பரமேஸ்வரன், சமூக சேவையாளர்களான சிதம்பரநாதன், சந்தரவதனா ரட்ணராஜா குருக்கள், எவ்.டி.மார்க்கட்டிங் பிரைவேட் லிமிட்டெட் வர்த்தகப் பணிப்பாளர் முஹமட் உஸ்மான் பழீல், ஓய்வுபெற்ற அதிபர் எம்.எச்.ஏ.சமீஉ, சமூகப் பணியாளர்களான சில்மியா, எஸ்.ஏ.ஹனீவ், கம்பளை சுவர்னா ஜுவலரி உரிமையாளர் கிஷோர் குமார், எழுத்தாளர் கலாபூஷணம் எஸ்.இஸ்மாலிஹா ராஜா, கே.அழகையா, ஊடகவியலாளர் எம்.ஏ.எம்.அனஸ் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7